விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 167 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 21 வியாழக்கிழமை (04.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
Meet Us!
Open Week June 2 - 7
Applications Open For :
• HND, Top - Up Degrees
• Undergraduate Courses
• Postgraduate Courses
(C-5778)
Northern Uni, No. 239 Arasadi Rd, Kantharmadam, Jaffna
021 7534 807

## இலங்கை உட்பட 60 நாடுகளின் பொருட்களுக்கு மேலதிக வரி

### பரிசீலிக்கிறது அமெரிக்கா



(வோஷிங்டன்)

இலங்கை உட்பட 60 நாடுகளிலிருந்து அமெரிக்காவினால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மேலதிக இறக்குமதி வரிகளை விதிப்பதற்கான யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொருட்களுக்கு 15ஆம் பக்கம் பார்க்க

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்

## நாட்டை விட்டு வெளியேற கோட்டாபயவுக்குத் தடை

### கோட்டை நீதிமன்றம் அதிரடி



(கொழும்பு)

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளின் பகுதியாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இரண்டு இராணுவ அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயணத் 15ஆம் பக்கம் பார்க்க

செம்மணி மனிதப் புதைகுழி

## இரண்டு என்புக் குவியல்கள் நேற்றும் இனங்காணப்பட்டன

### இன்றும் தொடர்கிறது அகழ்வு



(யாழ்ப்பாணம்)

1990களில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு சான்றாக விளங்கும் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில் 15ஆம் நாள் அகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போது இரண்டு என்புக் குவியல்கள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

(04ஆம் பக்கம் பார்க்க)

ஏ.ரி.எம் இயந்திரங்களுக்கு

## நிரப்பக் கொண்டு வரப்பட்ட 3½ கோடி ரூபாய் கொள்ளை

(கொழும்பு)

ஹொரணை நகரிலுள்ள அரச வங்கி ஒன்றின் ஏ.ரி.எம். இயந்திரங்களுக்குள் நிரப்புவதற்காகக் கொண்டு வரப்பட்ட 3 கோடி 50 இலட்சம் ரூபாய் (மூன்றரைக் கோடி) பணம், நபர் ஒருவரால் கொள்ளையடிக்கப்பட்டுள் 15ஆம் பக்கம் பார்க்க


## முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம்

### கேப்பாப்பிலவு காணி விவகாரம் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் கலந்தாய்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று (3) மாவட்டச் செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதி 04ஆம் பக்கம் பார்க்க

## இந்திய உயர்ஸ்தானிகர் நெடுந்தீவுக்கு விஜயம்



15ஆம் பக்கம் பார்க்க

- கனகராயன்குளத்தில் கோர விபத்து -

## முன்னாள் அரச அதிபர் இமெல்டா சுகுமாரின் மகன் உட்பட இருவர் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா கனகராயன்குளம், பெரியகுளம் பகுதியில் ஏ9 பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் இமெல்டா சுகுமாரின் மகனும் மற்றுமொரு இளைஞனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 04ஆம் பக்கம் பார்க்க



பொன்.சிவகுமாரன் நினைவேந்தல்

## வலி.கிழக்கு தவிசாளருக்கு பொலிஸார் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதல் வித்தாக தன்னுயிரை ஆகுதியாக்கிய தியாகி பொன்.சிவகுமாரனின் 52 ஆவது நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடுகள் தொடர்பில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பொலிஸ் விசாரணைக்கு இன்று 04ஆம் பக்கம் பார்க்க

## தாயகப் பாடல் விவகாரம் பாடகருக்கு மறியல்

(சாவகச்சேரி)

எழுச்சி பாடல் பாடி அதனை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்த குற்றச்சாட்டில் கைதான இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரிப் பகுதியிலுள்ள ஆலயத்தில் இடம்பெற்ற இசை நிகழ்வில் பாடலைப் பாடி, அந்தப் பாடலைச் செம்மையாக்கம் செய்து சமூக ஊடகங்களில் கிளிநொச் 15ஆம் பக்கம் பார்க்க

நாகை - காங்கேசன்துறை

## சிவகங்கை கப்பல் சேவை நேற்று முதல் ஆரம்பம்




15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : மானிப்பாய் கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : நாகராசா பிரதீபன் பெண் சுதர்சினி

ஆதனப்பதிவேட்டில் ஆதனம் பதியப்படவில்லை. வட்டாரம் 13 உலக்காவளை வீதியில் அமைந்துள்ள, வடமாகாணம் யாழ்ப்பாண ம்ாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறைவதனாவடை எனும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 15 விஸ்தீரணமுள்ள ஆதனத்தினை சண்டிலிப்பாய் வடக்கு மண்டுமண்டையை சேர்ந்த நாகராசா பிரதீபன் பெண் சுதர்சினி என்பவரால் இவ் ஆதனத்தின் உரிமையாளர் தாமே என பிரசித்த நொத்தாரிசு நா.தம்பிமுத்தன் எழுதிய 2005.06.01 ஆம் திகதிய 4980ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

### ஆதன விபரம்

உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் வி.மகேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2005.01.23 ஆம் திகதிய 452 ஆம் இலக்க வரைபடத்தில் இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு - நாமணி அக்காத்தைப் பிள்ளையின் உரித்தாளரின் ஆதனம்.
கிழக்கு - மண்டுமண்டை அரசடிப்பிள்ளையார் கோவில் ஆதனம்.
தெற்கு - ஒழுங்கை
மேற்கு - அமிர்தலிங்கம் சுந்தரலிங்கம் மற்றும் பங்காளரின் ஆதனம்.

மேற்குறித்த ஆதனத்தை நாகராசா பிரதீபன் பெண் சுதர்சினி என்ற பெயரில் சபையின் ஆதன பதிவேட்டில் பதிவு செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரில் ஆதன பதிவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.
மானிப்பாய்.

(7779)

## எம்பிலிப்பிட்டியவில் பாரிய தீ விபத்து
### 22 பேர் படுகாயம்

எம்பிலிப்பிட்டியவில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் 22 பேர் படுகாயமடைந்துள்ளனர். எம்பிலிப்பிட்டிய நோனாகம சுதுபாலம அருகிலுள்ள பகுதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் களஞ்சிய சாலைக்குள் நேற்று (3) காலை இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் தீப்பரவலைக் கட்டுப்படுத்தும் பணிகளில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டதுடன் சம்பவத்தில் காயமடைந்த 22 பேரும் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## தேவை

1. பொதியிடல்(பெண்கள்)
2. மில் வேலை தெரிந்தவர்கள்

பழக விரும்புவர்கள்
(ஆண், பெண்)
தொடர்புகளுக்கு :
**076 440 0816**

(2384)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## காளிகாதேவி ஆலயம் – மல்லாகம்

### விஷேட கலந்துரையாடல்

*அடியார்களே!*

மேற்படி ஆலயத்தின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் வளர்ச்சி செயற்பாடுகள் தொடர்பாக அனைத்து அடியார்களுடனும் கலந்துரையாடுவதற்காக இறை அருள் கூடியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.


எனவே எதிர்வரும் **07.06.2026** ஞாயிற்றுக்கிழமை **காலை 09.30 மணிக்கு** ஆலய மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெறும். இதில் அனைத்து அடியார்களையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகாதேவி ஆலய
இளைஞர் அணியினர்.

மல்லாகம். (7784)

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 - 04 - 1936



இறப்பு
02 - 06 - 2026

## செல்லையா பொன்னையா
### (முன்னாள் இ.போ.ச உத்தியோகத்தர்)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் கட்டுடை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னையா அவர்கள் கடந்த 02.06.2026 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மங்களநாயகி அவர்களின் பாசமிகு கணவரும் சாந்தினி, நளாயினி(சுவிஸ்)(முன்னாள் தாதிய உத்தியோகத்தர் வண்.மேற்கு), பவானி(மேற்பார்வையாளர் - துர்க்காபுரம் மகளிர் இல்லம்), தயானி(முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை தாதிய சகோதரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார், இந்திரன், யேக்கப் லக்ஷன் ஆகியோரின் மாமனாரும் அன்பரசன்(பிரான்ஸ்), ஐதுஷா, ஷாயிந், தியான்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நல்லையா, சின்னையா, இராசையா, செல்லம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 05.06.2026 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கட்டுடை,
மானிப்பாய்.

*தகவல் :* குடும்பத்தினர்
பொ.பவானி மகள் - 077 [illegible]

(7782)

## 33ம் ஆண்டு நினைவலைகளுடன்...



மலர்வு
01.01.1954

உதிர்வு
07.06.1993

அமரர்
### திருமதி நகுலேஸ்வரி நகுலராசா

திதி – சதுர்த்தி (04.06.2026)

கண்முன்னே வாழ்ந்தகாலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்று முப்பத்துமூன்றாண்டுகள் - ஆனாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள் அம்மா
உங்கள் ஆத்மா சாந்திக்காக வேண்டுகின்றோம்
என்றும் பிள்ளைகள் நாம்

ராஜன் ஹாட்வெயார்,
பருத்தித்துறை.

(C-5776)

கணவர் – மு.நகுலராசா
மற்றும் குடும்பத்தினர்,
அம்பன், குடத்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நல்லிணக்க முயற்சியை சீர்குலைக்க திட்டமிட்டு நடத்தப்பட்ட சதி

## வெசாக் கூடு சேதப்படுத்தியமை தொடர்பில் அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ், சிங்கள மாணவர்கள் இணைந்து உருவாக்கிய வெசாக் கூடு சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

இச்சம்பவம் குறித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் இதுவரை எமக்கு உத்தியோகபூர்வமாக எந்தவொரு அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை.

எனினும், சமூக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்த வரை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மாணவர்களே இந்த வெசாக் கூட்டை மிகவும் அர்ப்பணிப்புடன் உருவாக்கியுள்ளனர்.

எனவே, இந்த நல்லிணக்க முயற்சியைச் சீர்குலைப்பதற்காக ஏதேனும் ஒரு தரப்பினரால் திட்டமிட்டு நடத்தப்பட்ட சதிச் செயலா இது என்பது குறித்துப் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து பல கோணங்களில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.



இது தொடர்பான உத்தியோகபூர்வ விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் மேலதிக விபரங்களை வெளியிட முடியும் என அவர் தெரிவித்தார். (நி)



அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தின் ஸ்டடி மெல்போர்ன் மற்றும் அவுஸ்திரேலியாவின் லா ட்ரோப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கொழும்பில் உள்ள லா ட்ரோப் பல்கலைக்கழகம் "செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகள்" என்ற தலைப்பில் குழு விவாதம் கொழும்பில் உள்ள லா ட்ரோப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் லா ட்ரோப் பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற பேராசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், தொழில் துறை வல்லுநர்கள் மற்றும் கல்வித் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அரிசி இறக்குமதி; அரசாங்கம் பரிசீலனை

(கொழும்பு)

நாட்டின் தேவைக்கேற்ப அரிசியை இறக்குமதி செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, சந்தையிலுள்ள சம்பா மற்றும் கீரி சம்பா அரிசிகளுக்கு மாற்றீடாகக் கடந்த ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 120,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

தேவையேற்பட்டால் மாத்திரமே அரிசி இறக்குமதி செய்வது குறித்து ஆராயப்படுமெனவும் தெரிவித்தார். (நி)

# ஐ.எம்.எப் இன் நிதியுதவி இலங்கைக்கு கிடைத்தது

## உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு அங்கீகரிக்கப்பட்ட 5 ஆம் மற்றும் 6 ஆம் தவணைகளுக்கான 695 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி நாட்டுக்குக் கிடைத்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் பொருளாதார சீர்திருத்தங்களின் முன்னேற்றத்தை அடுத்தே இந்த இரு தவணைகளுக்கான நிதியும் ஒரே கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் தகவல்களின்படி, தற்போது கிடைக்கப்பெற்றுள்ள இந்த பெருந்தொகை நிதியானது நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பில் நேரடியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

கடந்த கால பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டு வரும் இலங்கையின் நிதி ஸ்திரத்தன்மையையும் சந்தை நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த நிதியுதவி ஒரு குறிப்பிடத்தக்க பக்கபலமாக அமையும் என நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர். (நி)

# இணையவழி நிதி மோசடி தொடர்பில் மே மாதத்தில் 360 முறைப்பாடுகள்

(கொழும்பு)

கடந்த ஒரு மாதத்தில் இணையவழி நிதி மோசடி தொடர்பான 360 இற்கும் மேற்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணனி அவசர தயார்நிலைக் குழு தெரிவித்துள்ளது.

இணையவழியில் நிதிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் குழுவின் முன்னணி தகவல் பாதுகாப்புப் பொறியாளர் சாருகா தமுனுபோலா குறிப்பிட்டார்.

அண்மைய வெசாக் மற்றும் போசன் பண்டிகைக் காலங்கள் உள்ளிட்ட பண்டிகைக் காலங்களில், இணையக் குற்றவாளிகள் நன்கு அறியப்பட்ட வர்த்தக முத்திரைகளைப் போல ஆள் மாறாட்டம் செய்யும் போலி விளம்பரங்களைப் பயன்படுத்தி நுகர்வோரை ஏமாற்றி, அவர்களின் முக்கியமான தனிப்பட்ட மற்றும் நிதித் தகவல்களைப் பெறுவது அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு இணையவழிப் பணப்பரிவர்த்தனையும் அதிகாரபூர்வமான மற்றும் முறையான இணையதளம் மூலமாக மட்டுமே செய்யப்படுகிறதா என்பதைப் பொதுமக்கள் சரிபார்க்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.


மேலும், குறுஞ்செய்திகள் அல்லது பிற கோரப்படாத தகவல்தொடர்புகள் மூலம் பெறப்பட்ட இணைப்புகள் வழியாக அணுகப்படும் இணைய தளங்களில் தனிப்பட்ட அல்லது நிதித் தகவல்களை உள்ளிடுவதற்கு எதிராகவும் அவர் எச்சரித்தார்.

முக்கியமான தகவல்களைப் பகிர்வதற்கு அல்லது இணைய வழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு முன்பு, இணையப் பயனர்கள் விழிப்புடன் இருக்குமாறும், இணைய தளத்தின் நம்பகத்தன்மையை கவனமாகச் சரிபார்க்குமாறும் அவர் அறிவுறுத்தினார். (நி)

# இலங்கைக்கும் 12.5 வீதம் கூடுதல் வரி விதிக்க பரிந்துரை

(வோஷிங்டன்)

கட்டாய உழைப்பு மூலம் தயாரிக்கப்படும் பொருட்களின் இறக்குமதியைத் தடை செய்யவும், அதனை நடைமுறைப்படுத்தவும் தவறிய குற்றச்சாட்டில், இலங்கை உள்ளிட்ட 60 நாடுகளின் இறக்குமதிப் பொருட்களுக்கு கூடுதல் வரிகளை விதிக்க அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் பரிந்துரைத்துள்ளது.





சீனா, இந்தியா மற்றும் தென் கொரியாவுடன் இலங்கையும் 12.5 வீதம் என்ற உயர்வான வரி விதிப்புக்கு முன்மொழியப்பட்ட நாடுகளில் அடங்கும்.

அதேசமயம் பங்களாதேஷ் மற்றும் கம்போடியா ஆகியவை 10 வீதம் என்ற குறைந்த விகிதத்திற்கு முன்மொழியப்பட்ட நாடுகளில் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படாது அமைச்சர் பிரசன்ன குணசேன அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போதைய நிலையில் பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது என தகவல் வெளியாகியுள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன நேற்று இதனைத் தெரிவித்துள்ளார். பேருந்து கட்டணத் திருத்தங்களுக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ள சூத்திரத்திற்கு அமையவே, கட்டணங்கள் திருத் தப்படுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள் விலையில் ஏற்படும் மாற்றம் 4 சதவீதத்திற்கும் அதிகமானதாக இருந்தால் மாத்திரமே பேருந்துக் கட்டணத்தை திருத்த முடியும்.

தற்போது ஏற்பட்டுள்ள எரி பொருள் விலை அதிகரிப்பு அந்த எல்லைக்குள் இல்லை என்பதால், பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் பேருந்துகள் சேவையில் இருந்து விலகுவதாக கூறுவதில் எவ்வித நியாயமும் இல்லை.

அவ்வாறு கூறி ஒரு சில பேருந்துகள் சேவையில் இருந்து விலகினாலும் ஏனைய பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபிண்டீகரண அழைப்பு



கடந்த 05.05.2026 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் செல்லர் இராசகிளி
(மின் இணைப்பாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 02.06.2026 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 04.06.2026 வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.06, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(C-5781)

தகவல் : குடும்பத்தினர்
077 977 3002


# இந்தியாவிற்கு எதிரான ரி-20 தொடரை கைப்பற்றியது இங்கிலாந்து!

இங்கிலாந்து நாட்டுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மகளிர் கிரிக்கெட் அணி மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடியது. இந்தத் தொடரின் முதல் இரு போட்டிகள் ஏற்கனவே நடந்த நிலையில், மூன்றாவது ரி-20 போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி பந்துவீச்சு தேர்வு செய்தது.

இதையடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 180 ஓட்டங்களை குவித்தது.

181 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய இங்கிலாந்து மகளிர் அணி 18.3 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 184 ஓட்டங்களை குவித்து, 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் இங்கிலாந்து மகளிர் அணி மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. (3)

# பிஃபா உலக கிண்ணத்தில் இலங்கை வம்சாவளி தமிழர்



2026 பி.பா உலகக் கிண்ண கால்பந்து தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் 25 வயதுடைய நிஷான் வேலுப்பிள்ளை தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலம் உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் போட்டியிடத் தகுதி பெற்ற முதலாவது தமிழ் கால்பந்து வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் டோனி போபோவிக் அறிவித்த 26 பேர் கொண்ட இறுதிப் பட்டியலில் நிஷான் வேலுப்பிள்ளையின் பெயர் உள்வாங் கப்பட்டுள்ளது.

ஏ-லீக் தொடரில் "மெல்போர்ன் விக்டோரி" அணிக்காக விளையாடும் நிஷான் வேலுப்பிள்ளை, உலகக் கிண்ணத் திற்குத் தேர்வாகியுள்ள 17 அறிமுக வீரர்களில் ஒருவராவார்.

நிஷான் வேலுப்பிள்ளையின் தந்தை சசிநாத் வேலுப்பிள்ளை தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவராவார்.

மெல்பேர்னில் பிறந்து வளர்ந்த நிஷான் வேலுப்பிள்ளை, மல் கிரேவ்வில் உள்ள மசெனோட் கல்லூரியில் கல்வி கற்றார்.

கடந்த 2024 ஒக்டோபர் மாதம் சீனாவுக்கு எதிரான உலகக் கிண்ணத் தகுதி காண் போட்டியின் போது, பயிற்சியாளர் போபோவிக் இவரை முதன்முதலாக சர்வதேச அணிக்கு அழைத்திருந்தார்.

அந்தப் போட்டியில் 83 ஆவது நிமிடத்தில் மாற்று வீரராகக் களமிறங்கிய நிஷான், அடுத்த 7 நிமிடங்களில் கோல் அடித்து அவுஸ்திரேலியாவின் 3-1 என்ற வெற்றியை உறுதி செய்தார்.

இதுவரை 7 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ள நிஷான் வேலுப்பிள்ளை, மொத்தம் 3 கோல்களை அடித்துள்ளார். இந்த 3 கோல்களும் உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டிகளில் பெறப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## இரண்டு...

நேற்றைய அகழ்வு தொடர்பில் கருத்துரைத்த காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது,

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளில் இதுவரை 34 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றனர்.

இதன்போது, புதிதாக 5 மனித என்புக் கூட்டுத் தொகுதி அடையாளம் காணப்பட்டு 6 மனித என்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மொத்தமாக 275 மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கெனவே 272 மனித என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இன்றைய அகழ்வில் சான்றுப் பொருட்கள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை. அதேவேளை என்பு குவியல்களாக இரண்டு குவியல்கள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

இதன்போது, இதற்கு முன்னர் இடம் பெற்ற செம்மணி மனிதப் புதைகுழி வழக்குடன் இவ் வழக்கினையும் இணைப்பது தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சட்டத்தரணி நிரஞ்சன் அவ்வாறு சில தரப்புகளால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் இங்கு தற்போது நடைபெறுவது முதற்கட்ட அகழ்வுப் பணிகள் மாத்திரமே. இவை மூன்று கட்டமாக நான்கு கட்டமாக மாறக்கூடும்.

அடுத்து அகழ்ந்தெடுக்கப்பட்ட என்புக் கூடுகள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் பால், வயது, இறப்புக்கான காரணம் என்பன கண்டறியப்பட்ட பிற்பாடே அது குறித்து பரிசீலிக்கப்படும்.

அத்துடன் முன்னைய வழக்குகளை இணைப்பது தொடர்பில் நீதிவான் நீதிமன்றத்தால் தீர்மானிக்க முடியாது. நியாயாதீக்கம் உள்ள நீதிமன்றங்களே வழக்குகளை இணைப்பது தொடர்பில் தீர்மானிக்கும் என்றார்.

அத்துடன் அகழ்வுப் பணிகளின் முடிவில் சான்றுப்பொருட்கள் மக்கள் அடையாளம் காணும் பொருட்டு காட்சிப்படுத்தப்படுத்தப்படும் எனக் கூறிய அவர்,

அகழ்வுப் பணிகள் நாளைய தினமும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றார்.

இதேவேளை கிருசாந்தி படுகொலை வழக்கில் சாட்சியமளித்த மரண தண்டனைக் கைதி இராணுவ கோப்ரல் சோமரத்தின ராஜபக்ஷ செம்மணிப் பகுதியில் சுமார் 300 பேருக்கும் மேற்பட்டோர் புதைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## முன்னாள்...

நேற்று முன்தினம் (02) இரவு இடம் பெற்ற இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா - யாழ்ப்பாணம் ஏ9 வீதியில் கனகராயன்குளம் பெரியகுளம் பகுதிக்கு அருகில் வீதியால் பயணித்த குறித்த இரு இளைஞர்கள் மீது சொகுசு கார் மோதியதில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் விபத்துக்குள்ளான சொகுசு காரின் பின்னால் வந்த ஹயஸ் ரக வாகனமும் விபத்துக்குள்ளாகியுள்ளது.

உயிரிழந்த இரண்டு இளைஞர்கள் கனகராயன்குளம் மற்றும் ஒட்டுசுட்டான் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் ஒருவர் யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் இமெல்டா சுகுமாரின் புதல்வனான அற்புதராஜா தர்சன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர்களின் உடல்கள் தற்போது பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் காரின் சாரதி மற்றும் வான் சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் வானின் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் கார் சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பயணித்தமையே விபத்துக்குக் காரணம் எனக் கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,250)

## வலி.கிழக்கு...

அழைக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உத்தியோகபூர்வ தீர்மானத்துக்கு அமைவாக தியாகி பொன். சிவகுமாரனின் 52ஆவது நினைவேந்தல் நிகழ்வு உரும்பிராயில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு முன்பாக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு உணர்வெழுச்சியுடன் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தமக்குக் கிடைக்கப் பெற்ற விசேட முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் விசாரணை நடத்துவதற்காக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷைக் கோப்பாய் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அழைத்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவிக்கையில்,

"அரசானது தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமைகளுக்குத் தடையில்லை எனப் பேச்சு அளவில் சர்வதேசத்துக்குத் தெரிவித்து வருகின்ற போதிலும் செயலளவில் அடிப்படை நினைவேந்தல் உரிமைகளைக்கூட அங்கீகரிக்க மறுக்கும் அடக்குமுறைப் போக்கையே தற்போது வரை கடைப்பிடித்து வருகின்றது என்றார். (ந-7)

## முல்லைத்தீவு...

பர் அ.உமாமகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் கூட்டுறவு பிரதி அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

கலாசார மண்டபம் அமைத்தல், கேப்பாப்புலவு காணி விடுவிப்பு, தற்போது நடைபெற்றுவரும் வேலைகளின் முன்னேற்றங்கள், பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை, வைத்தியசாலை மற்றும் திணைக்கள ஆளணி பற்றாக்குறை, வீதி அபிவிருத்திகள், முல்லைத்தீவு பேருந்து தரிப்பிடம் மற்றும் அதன் கடைத்தொகுதிகள், கிராமிய சித்த வைத்தியசாலைகளின் பற்றாக்குறை, போக்குவரத்து பிரச்சினை, காட்டு யானைகளால் கிராம மக்களின் சொத்துக்கள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் என பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

குறித்த கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணப் பிரதம செயலாளர், வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், ஏனைய திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.(ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சுற்றுச்சூழல்; கருத்தரங்கு

(தருமபுரம்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றாடல் அமைச்சினால் Urgent Climate Change எனும் தொனிப்பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நடைபெற்று வருகின்றது.

அதற்கமைய நேற்று முன்தினம் கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற குறித்த கருத்தரங்கில் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் கலந்து கொண்டு குறித்த செயலமர்வை ஆரம்பித்து வைத்தார். பாடசாலை அதிபர் எஸ்.ஜோன் செல்வரட்ணம், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் விமல் டிலக்மினி, சுற்றாடல் உத்தியோகத்தர் சி.லதீஸ்குமார் உள்ளிட்டோர். கலந்து கொண்டனர். (8-316)

# கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் காட்டுயானைகள் அட்டகாசம்

**(கிளிநொச்சி)**

**கிளிநொச்சி - அக்கராயன் பிரதேசத்தில் தொடரும் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் தமது வாழ்வாதாரத்தை இழக்க வேண்டியுள்ளதுடன் உயிராபத்துகளையும் எதிர்கொள்ள வேண்டிய அபாய நிலை காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

அக்கராயன்குளம் பிரதேசத்துக்குட்பட்ட கரித்தாஸ் குடியிருப்பு, கெங்காதரன் குடியிருப்பு, மணியங்குளம் விநாயகர் குடியிருப்பு, கண்ணகைபுரம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

நாளாந்தம் தங்களது கிராமங்களுக்குள் காட்டு யானைகள் புகுந்து பெருமளவில் பயன்தரு தென்னைமரங்களையும் ஏனைய மரங்களையும் அழித்து வருவதாகவும் குறிப்பாக தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கை மற்றும் ஏனைய உப உணவு செய்கைகளையும் அழித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மைய நாட்களில் குறித்த கிராமங்களில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



இவ்வாறு தங்களது வாழ்வாதாரம் ஒரு புறம் அழிக்கப்படுவதுடன் உயிர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டிய ஒரு அபாய நிலை காணப்படுவதாகவும் குறித்த பிரதேச மக்களும் விவசாயிகளும் சுட்டிக்காட்டியுள்ளனர். (8)

## மருத்துவ உபகரணங்கள் வழங்கல்!



(மன்னார்)

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை அபிவிருத்திக் குழு மற்றும் வைத்தியசாலைப் பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைவாக, வைத்தியசாலையின் பயன்பாட்டிற்காக சுமார் 20 இலட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் மக்கள் மற்றும் அந்நாட்டு அரசாங்கத்தின் அனுசரணையில், இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி லுக்மான் சஹாப்தீன் ஒழுங்கமைப்பில் நோயாளர்களுக்கான சக்கர நாற்காலிகள் இயன்முறை மருத்துவ உபகரணங்கள், சேலன் தாங்கிகள், ஊன்று கோல்கள் போன்ற அத்தியாவசிய உபகரணங்கள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன. (8- 285)

## புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் பெருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற வுள்ளது.

பொங்கல் விழாவை முன்னிட்டு 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு விஷேட அபிஷேக பூசைகள் நடைபெறும்.

15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு விஷேட அபிஷேகம் ஆரம்பமாகும்.

தொடர்ந்து பூசைகள், அர்ச்சனைகள், பால்காவடிகள், பறவைக் காவடிகள், தீச்சட்டி, தீ மிதிப்பு, பொங்கல் போன்ற பல நேர்த்திக்கடன்கள் இடம்பெறும். அன்றைய தினம் இரவு 10.30 மணிக்கு பண்டமெடுக்கப்பட்டு சுவாமி வீதியுலா வருவார்.

16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5 மணிக்கு விஷேட பூசை, பாலைமர அபிஷேக பூசை, வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து பொங்கல்விழா இனிதே நிறைவுபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (8-33)


## புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் தலைவராக அ.அருந்தவநேசன், உப தலைவராக வி.சிவசிதம்பரம், செயலாளராக எஸ்.கணேசலிங்கம், உப செயலாளராக என்.பாலசுப்பிரமணியம், பொருளாளராக வி. குணாளன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8)

## கமநல சேவை நிலையங்கள் ஊடாக கிளிநொச்சி விவசாயிகளுக்கு உரம்



(தருமபுரம்)


கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் 2026ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு கமநல சேவை நிலையங்கள் ஊடாக 50 கிலோ யூரியா உரம் வழங்கப்பட்டது. (8-316)



பிரஜாசக்தி திட்டத்தின் கீழ் உடுவில் மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களின் கைவினைப் பொருட்கள் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இணுவில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஏழாலை மேற்கு பிரஜாசக்தித் திட்ட தலைவர் பிரணவன் தலைமையில் நடைபெற்றது.

## டெங்குபரவும் சூழல்; 1,40,000 ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தில் டெங்கு நுளம்பு பரவும் சூழலை பேணிய 14 குடியிருப்பாளர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு ஒழிப்பு திட்டங்களின் கீழ் கோப்பாய், இருபாலை மற்றும் நீர்வேலி பகுதிகளில் அப்பகுதி பொது சுகாதார பரிசோதகர்களால் கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் போது டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை பேணிய 14 குடியிருப்பாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவர்களுக்கு எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகள் நேற்று முன் தினம் நடைபெற்ற போது, குடியிருப்பாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சத்து 40ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (8)

## தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று புதன்கிழமை காலை, தென்மராட்சி பிரதேச செயலாளர் எப்.சி. சத்தியசோதி ஏற்பாட்டில், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்- தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான க. இளங்குமரன் தலைமையில் நடைபெற்றது.


மேற்படி கூட்டத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள தேவைப்பாடுகள், குறிப்பாக சுகாதாரம், வீதி, போக்குவரத்து, விவசாயம், சுண்ணக்கல் அகழ்வு, வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

நிகழ்வில் சாவகச்சேரி நகர சபை தவிசாளர் கிராம அலுவலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிந்துநதி நீர் ஒப்பந்தத்தை மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் இன்னும் உடன்படவில்லை: மீண்டும் பேச்சு வார்த்தை நடத்துவது நீடித்த அமைதியைக் கொண்டுவர உதவும்

**என்ற தலைப்பிலான கட்டுரைக்கான பதில் (17 ஏப்ரல் 2026 அன்று சாத்தம் ஹவுஸா வெளியிடப்பட்டது)**



கட்டுரை சாதம் ஹவுஸ் - Chatham House இருந்து வந்தது. இது ஒரு சுயாதீனமான கொள்கை நிறுவனம் மற்றும் விவாதம் மற்றும் உரையாடலுக்கான நம்பகமான மன்றம் மற்றும் பாதுகாப்பான, நிலையான, வளமான மற்றும் நீதியான உலகத்தை உருவாக்க அரசாங்கங்களுக்கும் சமூகங்களுக்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக இந்தியாவின் செலவில் செயற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் தற்போதைய நிலையைப் பாதுகாப்பதில் பெரிதும் சாய்ந்திருக்கும் ஒரு முன்னோக்கை கட்டுரை முன்வைக்கிறது.

இந்தக் கட்டுரை, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை ஓர் ஒத்துழைப்புக் கருவியாகச் சித்தரிக்கும், அடிப்படையிலேயே தவறான ஒரு கண்ணோட்டத்தில் இருந்து தொடங்குகிறது. உண்மையில், அது பாகிஸ்தான் மீது ஒப்பீட்டளவிலான சுமையைச் சுமத்தாமல், இந்தியா மீது பல கடமைகளைத் திணித்த ஓர் பிரிவினைக் கருவியாகவே அதிகம் செயற்பட்டது.

எந்தவொரு நீர் பகிர்வு ஒப்பந்தத்தின் நீடித்த தன்மையும், பெரும்பாலும், மேல் நீர்ப்பிடிப்புப் பகுதியின் நடத்தையைப் பொறுத்தே அமைகிறது. தொடர்ச்சியான மோதல்களுக்கு மத்தியிலும் இந்த ஒப்பந்தம் அறுபது ஆண்டுகள் நீடித்திருந்தால், அதற்கான முழுப் பெருமையும் இந்தியாவையே சாரும். ஏனெனில், ஒரு பொறுப்புள்ள மற்றும் கொள்கைப்பிடிப்புள்ள நாடாக, எந்தவிதப் பிரதிபலனும் எதிர்பார்க்கப்படாத நிலையிலும், மிகவும் கொந்தளிப்பான காலகட்டங்களில்கூட இந்தியா தனது கடமைகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்தது. அதேசமயம், ஜம்மு காஷ்மீரில் வளர்ச்சியைத் தடுக்கவும் தாமதப்படுத்தவும் பாகிஸ்தான் இந்த ஒப்பந்தத்தை ஒரு அரசியல் கருவியாகத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தது.

**சமமற்ற ஒப்பந்தத்தை இடை நிறுத்துவதற்கான இந்தியாவின் இறையாண்மை உரிமை**

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இடைநிறுத்தியதை, பதற்றத்தை அதிகரிக்கும் அல்லது ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் ஒரு செயலாக இந்தக் கட்டுரை சித்தரிக்கிறது.

இந்தச் சித்தரிப்பு தவறான வழிகாட்டுதலாகவும், தார்மீக ரீதியாகத் தலைகீழானதாகவும் உள்ளது. இந்தியா ஒரு பாதிக்கப்பட்ட நாடு பாகிஸ்தான் மண்ணிலிருந்து அல்லது அதன் ஆதரவுடன் செயற்படும் சக்திகளால், பல தசாப்தங்களாகத் தனது மண்ணில் தொடர்ச்சியான பேரழிவுகரமான பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பஹல்காம் தாக்குதல் என்பது, ஒட்டகத்தின் முதுகில் வைக்கப்பட்ட கடைசி வைக்கோல் துண்டு போன்றது.

இந்தியாவிற்கு எதிரான பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் ஒரு நாட்டிற்கு, இந்தியா தொடர்ந்து ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற முன்மொழிவு, சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை மீறுகிறது. அடிப்படைச் சூழ்நிலைகள் கணிசமாக மாறியிருக்கும் போது ஒப்பந்தக் கடமைகளை இடைநிறுத்த அனுமதிக்கும் "ரீபஸ் சிக் ஸ்டான்டிபஸ்"- rebus sic stantibus கோட்பாடும் இதில் அடங்கும். ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு ஒப்பந்தம், மற்றொரு தரப்பு மறைமுக வன்முறை மூலம் இருதரப்பு உறவைத் தொடர்ந்து சீர் குலைக்கும் போது, ஒரு வழிப் பாதையாக நீடிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

**ஒப்பந்தத்தின் கட்டமைப்பு ரீதியான சமத்துவமின்மை நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.**

இந்தக் கட்டுரை, இந்திய நீர்வழிப் போக்குவரத்தை (IWT) ஒரு "நிலைப்படுத்தும் சக்தியாகவும்" மற்றும் நீடித்த தன்மைக்கான ஒரு முன்மாதிரியாகவும் சித்தரிக்கிறது. ஆனால் ஒத்துழைப்பு என்ற பெயரில் இந்தியா எதை விட்டுக் கொடுத்தது என்பதை வெளிப்படையாகப் புறக்கணிக்கிறது. மேல் நீர்ப்பிடிப்பு மாநிலம் என்ற வகையில், அதற்கு ராவி, பியாஸ் மற்றும் சட்லஜ் ஆகிய மூன்று கிழக்கு நதிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டன. இது, ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த நீரையும் உள்ளடக்கிய படுகையின் மொத்த நீரோட்டத்தில் 20 சதவீதத்திற்கும் குறைவானதாகும். இந்தச் சிறிய பங்கிற்காகக் கூட, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் மாற்றுப் பணிகளுக்கான இழப்பீடாக இந்தியா £62 மில்லியன் (தற்போதைய மதிப்பில் சுமார் $2.45 பில்லியன்) செலுத்த வேண்டியிருந்தது. இந்தியாவின் வளர்ச்சித் தேவைகளும் படுகையின் நீரியலும் சரியாகப் புரிந்து கொள்ளப்படாத ஒரு காலகட்டத்தில், 1960இல் புவிசார் அரசியல் அழுத்தங்களின் கீழ் இந்த அசாதாரணமான சலுகை வழங்கப்பட்டிருக்கலாம். அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியாவின் மக்கள்தொகையும் நீர்த் தேவையும் பெருமளவில் வளர்ந்துள்ள நிலையில், நீர் பயன்பாடு மீதான ஒப்பந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக ஜம்மு-காஷ்மீர் தொடர்ந்து வளர்ச்சியடையாமல் இருப்பதால், இந்த ஏற்பாடு கட்டமைப்பு ரீதியாகத் தாங்க முடியாததாகிவிட்டது. "பெருகிவரும் தண்ணீர் பற்றாக்குறைக்கு மத்தியில் இந்தியாவின் நீர்த்தேக்கத் திறன்கள் மேம்பட்டால், நெருக்கடி தீவிரமடையும் அபாயங்கள் உள்ளன" என்று அந்தக் கட்டுரை வாதிடுகிறது இந்த முன்மொழிவு, இந்தியா தனது நியாயமான வளர்ச்சி அபிலாஷைகளை முற்றிலுமாகக் கைவிட வேண்டும் என்ற ஒரு வாதத்திற்கு ஒப்பானதாகும்.

**பாகிஸ்தான், ஒப்பந்தத்தின் தகராறு தீர்க்கும் வழிமுறைகளை ஆயுதமாக்கியுள்ளது.**

இந்தக் கட்டுரை, நிரந்தர சிந்து நதி ஆணையத்தையும் மூன்றாம் தரப்பு செயல்முறைகளையும் "தரவுப் பகிர்வு" மற்றும் தகராறு மேலாண்மைக்கு வழி வகுப்பதாகப் புகழ்ந்து பேசுகிறது. ஆனால், மேற்கு நதிகளில் இந்தியா செயற்படுத்தும் முற்றிலும் சட்டபூர்வமான ஆற்று நீர்மின் திட்டங்களைத் தடுப்பதற்காக, பாகிஸ்தான் இந்த வழிமுறைகளைத் தொடர்ச்சியாகத் தவறாகப் பயன்படுத்துவதை அது குறிப்பிடத் தவறுகிறது.

இந்தத் திட்டங்களில் சில, 5 மெகாவாட்டிற்கும் குறைவான திறன் கொண்டவையாகவும், பாகிஸ்தானின் நீர் இருப்புக்கு எந்தவொரு குறிப்பிடத்தக்க பாதிப்பையும் ஏற்படுத்தாதவையாகவும் உள்ளன. கிஷன்கங்கா, பக்லிஹார், ரட்லே மற்றும் பல திட்டங்களுக்கு பாகிஸ் தான் ஆட்சேபனைகளை எழுப்பியுள்ளது. இதன் மூலம், கேள்விக்குரிய அதிகார வரம்பைக் கொண்ட நடுவர் மன்ற நடவடிக்கைகளில் இந்தியாவை இழுத்துச் செல்வதோடு, ஒப்பந்த மன்றங்களை உண்மையான தகராறு தீர்வுக்கான கருவிகளாகப் பயன்படுத்தாமல், ராஜதந்திர ரீதியான துன்புறுத்தலுக்கான கருவிகளாகவும் பயன்படுத்துகிறது. தொழில்நுட்பத் தகராறுகள் "அடிக்கடி அதிகரித்து, மேலும் அரசியல்மயமாக்கப்பட்டுள்ளன. என்பதை இந்தக் கட்டுரை ஒப்புக் கொண்டாலும், இந்த மோசமான நிலைக்கு பாகிஸ்தான் மீது எந்தப் பொறுப்பையும் சுமத்தத் தவறிவிட்டது.

**நவீனமயமாக்கல் வாதங்கள் இருபுறமும் கூர்மையானவை.**

அந்தப் பிரிவு ஒப்புக்கொள்வது போலவே, இந்திய நீர் ஒப்பந்தம் (IWT), "நவீன காலநிலை அறிவியலுக்கு முந்தையது மற்றும் காலாவதியான நீரியல் அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டது." இந்த ஒப்பந்தம் தற்போதைய யதார்த்தங்களுக்கு மிகவும் பொருத்தமற்றதாக இருந்தால், தற்போதைய நீரியல் நிலைமைகள், சமமான நீர் ஒதுக்கீடு, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் இந்தியாவின் நியாயமான வளர்ச்சித் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அது அடிப்படையில் மறுபேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்பதே தர்க்க ரீதியான முடிவாகும். ஆரம்பத்திலிருந்தே இந்தியாவிற்கு எதிராகச் சார்புடையதாக இருந்த ஏற்பாடுகளைப் பாதுகாப்பதற்காக அது வெறுமனே "மீட்கப்படுவது" மட்டும் போதாது.

**மற்ற நதிப் படுகைகளுடனான ஒப்பீடுகள் பொருத்தமானவை அல்ல.**

கூட்டுறவு ஆட்சிமுறைக்கு ஆதரவாக வாதிடுவதற்காக, இந்தக் கட்டுரை ஆரல் கடல் படுகை, மேகாங் நதி ஆணையம் மற்றும் செனகல் நதிப் படுகை ஆகியவற்றுடன் ஒப்புமைகளை முன்வைக்கிறது. இந்த எடுத்துக்காட்டுகளில் உள்ள நாடுகள், தங்களின் வளர்ச்சி நலன்களில் பரந்த அளவில் ஒத்திருக்கின்றன. மேலும் ஒன்றுக்கொன்று எதிராக நீடித்த எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் ஈடுபடவில்லை. இந்தியா-பாகிஸ்தான் உறவுக்கு அத்தகைய அடித்தளம் எதுவும் இல்லை. அடிப்படை நல்லெண்ணம் இருக்கும் இடத்தில்தான் ஒத்துழைப்புக் கட்டமைப்புகள் செயற்படுகின்றன. இந்தியாவைக் குறிவைக்கும் பயங்கரவாத உட்கட்டமைப்புகளுக்கு பாகிஸ் தான் தொடர்ந்து ஆதரவளிப்பது, மேகாங் ஆணையம் அல்லது ஜோர்டான்- இஸ்ரேல்நீர் ஏற்பாடுகளுடனான ஒப்பீட்டை முழுமையற்றதாகவும், அடிப்படையில் தவறாக வழி நடத்துவதாகவும் ஆக்குகிறது.

**பொறுப்புக்கூறல் இல்லாத நீர் இராஜதந்திரமா?**

இந்தக் கட்டுரை, சர்வதேச அமைப்புகள் "நீர் இராஜதந்திரத்தை" ஆதரிக்க வேண்டும் என்றும், நம்பிக் கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் "பொறுமை"யைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி நிறைவடைகிறது. இந்தியாவின் நிலைப்பாடு தெளிவானது: பாகிஸ்தானுடனான அனைத்துப் பரிவர்த்தனைகளும் இரு தரப்பு சார்ந்தவை என்ற கடுமையான கொள்கையை அது கடைப்பிடிக்கிறது, மேலும் மூன்றாம் தரப்பு மத்தியஸ் தத்தை நிராகரிக்கிறது. மேலும், பயங்கரவாத உட்கட்டமைப்பை அகற்றுவதற்கும், தனது சர்வதேசக் கடமைகளைநிறைவேற்றுவதற்கும் பாகிஸ்தான் மேற்கொள்ளும் சரிபார்க்கக்கூடிய, தொடர்ச்சியான நடவடிக்கைகளின் மூலமாக மட்டுமே நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். பாகிஸ்தான் தொடர்ந்து தண்டனையின்றிச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில், இந்திய நீர்வழி ஒப்பந்தத்தைப் புனிதமானதாகக் கருதுமாறு இந்தியாவைக் கேட்பது அமைதிக்கான ஒரு வழிமுறை அல்ல. அது, இந்தியாவின் நிதானத்தைத் தொடர்ந்து சுரண்டுவதற்கான ஒரு வழிமுறையாகும்.

சுருக்கமாக, சாத்தம் ஹவுஸின் இந்த ஒருதலைப்பட்சமான கட்டுரை, ஒரு மூன்றாம் தரப்பினரால் மத்தியஸ்தம் செய்யப்பட்ட காலாவதியான மற்றும் ஒருதலைப்பட்சமான நிறுவன ஏற்பாட்டைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, இந்தியா தனது இறையாண்மை நலன்கள், பாதுகாப்புக் கவலைகள் மற்றும் வளர்ச்சித் தேவைகளைக் கீழ்ப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. ஒப்பந்தத்தை நிறுத்திவைத்தது உட்பட, பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புக்கு இந்தியா காட்டும் நிதானமான பதில், பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் அல்ல. அது, உறவுமுறையின் நிபந்தனைகள் மாற வேண்டும் என்பதற்கான நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு சமிக்ஞையாகும்.

(C-5775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 3,000 பயிற்சி தாதியர்களை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை



(கொழும்பு)

2029 ஆம் ஆண்டுக்குள் தாதியர் சேவையில் 13,600 பணியாளர்களைச் சேர்க்கும் திட்டத்தின் முதல் கட்டமாக 3,000 பயிற்சி தாதியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

2021, 2022, 2023 அல்லது 2024 ஆம் ஆண்டுகளில் விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு இந்த ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள், மே 29 முதல் ஜூன் 30 வரை, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் அதிகாரப்பூர்வ இணையத் தளமான www.health.gov.lk மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். (நி)

# தேசிய பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகளின் அபிவிருத்திக்காக 13.5 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், தேசிய பாடசாலைகள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளின் அபிவிருத்திக்காக வரலாற்றில் அதிக பட்சமான 13.5 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாகவும், பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்காக மேலதிகமாக 5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அத்தோடு மாணவர்களுக்கு அன்பையும், பாதுகாப்பையும், அரவணைப்பையும் வழங்கும் சிறந்த இடமாகப் பாடசாலையை மாற்றியமைப்பதற்கான பொறுப்பை, அரசாங்கம் என்ற வகையில் தாம் மிகுந்த நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.


கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் ஆட்சேர்ப்பு தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம், 23,000 ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும், இந்த ஆண்டின் இறுதிக்குள் குறித்த ஆட்சேர்ப்புகள் இடம்பெறும் எனவும் தெரிவித்த பிரதமர், இதன் மூலம்



2027 ஆம் ஆண்டளவில் ஆசிரியர் வெற்றிடங்களை கணிசமாகக் குறைக்க முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார். (நி)

# டில்லியில் உணவகமொன்றில் பயங்கர தீ விபத்து



(புதுடில்லி)

இந்திய தலைநகர் டில்லி உணவகத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

மேலும் சிலர் படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டில்லியின் மாளவியா நகர் பகுதியில் உள்ள உணவகத்தின் அடித்தளத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் மற்றும் பொலிஸார் சிக்கியிருந்த 11 பேரை மீட்டுள்ளனர்.

அத்துடன் கட்டடத்திற்குள் பலர் சிக்கியிருக்கலாம் என அச்சம் நிலவி வருவதால் மீட்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

காயம் அடைந்த 37 பேருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தீ விபத்திற்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில் உயிரிழந்தவர்களின் உடலை அடையாளம் காணும் பணி இடம்பெற்று வருகிறது.

விபத்திற்கான விசாரணை இடம்பெற்றுவருவதுடன் உயிரிழந்தவர்களில் பெரும் பாலானோர் வெளிநாட்டினர் என தெரியவந்துள்ளது. (3)

## விண்ணப்பம் கோரல்

(வவுனியா)

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் 2026 ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணனி வடிவமைப்பாளர் NVQ4, கள உதவியாளர் விவசாயம் NVQ4, மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர் NVQ4 நீர்க்குழாய் பொருத்துநர் NVQ 3, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் NVQ4 போன்ற கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவத்தினை அலுவலகத்தில் (அலுவலக நேரத்தில்) பெற்றுக் கொள்ளலாம் அல்லது tcvavuniya@dtet.gov.lk மூலமாகவும் விண்ணப்பிக்க முடியும் என அதிபர் அறிவித்துள்ளார். (நி)

# ஜூலை மற்றும் ஓகஸ்டில்

## அதிக வெப்பநிலை பதிவாகும் சாத்தியம்

(கொழும்பு)

உலகளாவிய காலநிலையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வரும் "எல் நினோ" காலநிலைத் தாக்கத்தினால், நாட்டில் நடப்பு ஆண்டின் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் வழக்கத்தை விட மிகக் கடும் வெப்பத்துடனான வானிலை நிலவக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமான்னகே ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

நாடு தற்போது தென்மேற்கு பருவப் பெயர்ச்சி கால நிலையை எதிர்கொண்டுள்ள போதிலும், எல் நினோவின் நேரடித் தாக்கங்கள் அடுத்த சில வாரங்களில் நாட்டில் தீவிரமடைய ஆரம்பிக்கும்.

வழமையாக ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நாட்டில் மழைவீழ்ச்சி குறைவடையும் சாத்தியக்கூறுகள் காணப்படுவது இயல்பானதாகும். எனினும், உலக அளவில் தற்போது உருவாகி வரும் தீவிர "எல் நினோ" நிலைமைகளால், இம்முறை இந்த இரண்டு மாதங்களிலும் மழைவீழ்ச்சி மிக மிகக் குறைந்த அளவிலேயே பதிவாகலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் நேரடி விளைவாக, ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நாட்டின் வெப்பநிலை வழமையான சராசரி அளவை விட மிக அதிகமாக நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இந்த இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்வதற்காக, அரசாங்கத்தின் பல்வேறு உயர்மட்டத் திணைக்களங்களை ஒன்றிணைத்து அவசரக் கூட்டுப் பேச்சுவார்த்தைகளை நடத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். (நி)

சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்



அரச சேவையில் 12 வருடங்கள் காவலாளியாக அரும்பணியாற்றி 2026.06.04 ஆம் திகதி தனது 60 ஆவது அகவையில் ஓய்வுபெற்றுச் செல்லும்
திரு.சைமன் பற்றிக் யோகராஜா அவர்களின்
சேவையினைப் பாராட்டி வாழ்த்துவதோடு
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம். மேலும் அவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர்: ஊழியர் ...
வலிகாமம் தென்மேற்கு பிர...

14ஆம் ஆண்டு நினைவலைகள்
அமரர். சிவயோகம் செல்வராசா
(ஓய்வு பெற்ற ஆசிரியை)
திதி-04.06.2026



எம்இனிய அன்னையே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களது அன்பும், செயல்களும்
எமது நினைவுகளிலிருந்து நீங்கி விடமாட்டா,
தங்கள் நினைவுகளோடு தான்
வாழ்கின்றோம்.
தங்களை என்றும் மறவோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(2373)
தோற்றம்– 31.01.1928 மறைவு – 07.06.2012
தங்கள் நினைவுகளுடன்–மகள்மார், மருமக்கள், பேரக்குழந்தைகள்,
மருமகன் - பேராசிரியர். மா.சின்னத்தம்பி.
..., கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அண்ணாமலையின் அரசியல் பயணத்தில் மாற்றமா?

### தீவிரமடையும் புதிய கட்சி குறித்த ஊகங்கள்



(டில்லி)

தமிழக அரசியலில் முக்கிய அரசியல்வாதியாக உருவெடுத்துள்ள குப்புசாமி அண்ணாமலையின் அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியாகி வருகின்றன.

சென்னையில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய "புதிய கட்சி தொடங்கப் போகிறீர்களா?" என்ற கேள்விக்கு பதிலளித்த அண்ணாமலை, "இன்னும் இரண்டு நாட்களில் அனைத்தையும் பற்றி பேசுகிறேன்" என தெரிவித்துள்ளார். இதனை அடுத்து அவரது அரசியல் எதிர்காலம் தொடர்பான எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், ஜுன் 2ஆம் திகதி அமித்ஷா டெல்லியில் அண்ணாமலை சந்தித்தமை அரசியல் வட்டாரங்களில் பல்வேறு விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அவர் தற்போதைய அரசியல் பாதையிலேயே தொடர்வாரா அல்லது புதிய அரசியல் முயற்சியை மேற்கொள்வாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

2020ஆம் ஆண்டு பா.ஜ.கவில் இணைந்த அண்ணாமலை, விரைவிலேயே மாநில துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

2021ஆம் ஆண்டு அரவக்குறிச்சி தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த போதிலும், அதே ஆண்டில் தமிழக பா.ஜ.க தலைவராக பொறுப்பேற்றார். அதன் பின்னர் தமிழக அரசியலில் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவராக தன்னை நிலை நிறுத்திக் கொண்டார்.

இந் நிலையில் அண்ணாமலை தனது அடுத்த அரசியல் முடிவை விரைவில் அறிவிக்கவுள்ளதாக கூறியுள்ள நிலையில், தமிழக அரசியல் களத்தில் புதிய மாற்றங்கள் ஏற்படுமா என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. (3)

## பயனற்ற கண்ட...

## தண்டனைகளை...

### ஐ.நாவிடம் ஈரான்...

(டெஹ்ரான்)

**இஸ்ரேலுக்கு எதிராக வெறும் கவலைகளை வெளியிடும் கட்டத்தைத் தாண்டி, அதற்கு எதிராகக் கடுமையான தண்டனைகளை அமுல்படுத்த முன்வருமாறு ஈரானின் பிரதி... வெளிவிவகார அமைச்சர் காசிம் கரீபாபாடி ஐ.நா பாதுகாப்புச் சபையிடம் அவசரமாக வலியுறுத்தியுள்ளார்.**

இது குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் சமூக ஊடகப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றில் இந்த விபரங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய நெருக்கடி நிலைமைகள் குறித்துக் காசிம் கரீபாபாடி மேலும் விபரிக்கும் போது,

தற்போதைய மத்திய கிழக்கு நெருக்கடியானது, ஏனைய நாடுகளின் இறையாண்மையைக் கடுமையாக மீறும், போர்நிறுத்தங்களை அர்த்தமற்றதாக்கும் மற்றும் பலஸ்தீனர்களின் புனிதத்தன்மைகளைச் சீரழிக்கும் சீயோனிச ஆட்சியின் குற்றங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையிலிருந்து விலக்களிக்கும் போக்கின் நேரடி விளை...

## பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டை; வளைகுடாவில் மீண்டும் பதற்றம்



(வோஷிங்டன்)

வோஷிங்டனுக்கும் டெஹ்ரானுக்கும் இடையிலான இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளில் பெரிய முன்னேற்றம் எதுவும் காணப்படாத நிலையில் நேற்று வளைகுடாப் பகுதிகளில் பதற்றம் மீண்டும் தீவிரமடைந்தது.

பெப்ரவரி மாத இறுதியில் மோதல் தொடங்கியதிலிருந்து, அமெரிக்க இராணுவத் தளங்கள் அமைந்துள்ள வளைகுடாப் பகுதியில் உள்ள இலக்குகளை ஈரான் மீண்டும் மீண்டும் தாக்கி வருகிறது.

பிராந்தியக் கடற்பரப்பில் குவைத்தில் உள்ள அமெரிக்கப் படைகளை குறிவைத்த ஈரானிய ஆளில்லா விமானங்களை அமெரிக்க இராணுவம் சுட்டு வீழ்த்தியதாகவும், ஈரானின் தாக்குதல் முயற்சிகளைத் தொடர்ந்து ஹார்முஸ் ஜலசந்திக்கு அருகிலுள்ள கெஷ்ம் தீவின் மீது தாக்குதல்களை நடத்தியதாகவும் மத்திய கட்டளைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, புதன்கிழமை காலை வர்த்தகத்தில் எண்ணெய் விலையை 1 சதவீதத்துக்கும் மேல் உயர்ந்தது.

இந்நிலையில், நிலையற்ற போர்நிறுத்தத்தின் கீழ் இந்த மோதல் ஒரு முட்டுக்கட்டையில் சிக்கியுள்ளதுடன், ஹார்முஸ் நீரிணை கடல்வழிப் போக்குவரத்திற்காகப் பெருமளவில் மூடப்பட்டுள்ளது.

போரை நிறுத்துவதற்கான ஒரு தற்காலிக ஆரம்ப உடன்பாட்டை எட்டியுள்ளதாக ஈரானும் அமெரிக்காவும் கடந்த வாரம் தெரிவித்தன. ஆனால், இரு தரப்பினரும் இன்னும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.

பல நாட்களாக டெஹ்ரான் வோஷிங்டனுடன் தொடர்பு கொள்ளவில்லை என்று ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்படவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார். (3)

## ஹார்முஸ் நீரிணையை திற...

### ஈரானுக்கான தடைகளில் தளர்...

### அமெரிக்கா ...



(வோஷிங்டன்))

ஹார்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கு பதிலாக, ஈரானுக்கு விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளைத் தளர்த்துவதற்கு ட்ரம்ப் நிர்வாகம் எவ்வித உடன்பாடும் எட்டவில்லை என அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். "ஈரான் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டதற்

# ...ண்டனங்களை விடுத்து ...ளை அமுல்படுத்துங்கள்!

## ...ஈரான் அதிரடி கோரிக்கை

...வெறும் ...டத்தைத் ...மையான ...ல்படுத்த ...பிரதி ...கரீபாபாடி ...வசரமாக



...ழக்கு ...நாடு ...க் கடு ...த்தங் ...ற்றும் ...ர்மை ...ானிச ...ற்றும் ...டுள்ள ...களிக் ...ிளை

வாகும்.

வெறும் குறைந்த செலவிலான மற்றும் பயனற்ற கண்டனங்களை வெளியிடுவதன் மூலம் மட்டும் சர்வதேச சட்டங்களைப் பாதுகாத்து விட முடியாது எனத் தெரிவித்தார்.

பெய்ரூட் நகர் மீது இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மேற்கொள்ள விருந்த பாரிய தாக்குதலைத் தான் தடுத்து நிறுத்தியதாக அமெரிக்க ஜனாதிபதி அண்மையில் வெளியிட்டிருந்த கூற்றினையும் ஈரானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் வன்மையாகச் சாடியுள்ளார்.

“லெபனானின் பெய்ரூட் தலைநகர் மீதான தாக்குதலைத் தான் தடுத்து நிறுத்தியதாக அமெரிக்க ஜனாதிபதி கூறுவது, வோஷிங்டன் அமைதியை விரும்புகிறது என்பதற்கான அடையாளம் அல்ல. மாறாக, சீயோனிச ஆட்சியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேலாண்மை செய்வதில் (வழிநடத்துவதில்) அமெரிக்காவிற்கு இருக்கும் நேரடிப் பங்கையே இது உறுதிப்படுத்துகிறது.” எனத் தெரிவித்திருந்தார். (3)

# நேபாள பிரதமருக்கு எதிராக வலுக்கும் போராட்டங்கள்

## பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே பாரிய எதிர்ப்பலை



(காத்மண்டு)

இந்தியாவுடனான எல்லை பிரச்சினை குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்த நேபாள பிரதமர் பாலேந்திர ஷா பதவி விலக வலியுறுத்தி போராட்டங்கள் நடத்தப்பட்டு வருவதால் அங்கு பரபரப்பு நிலவி வருகிறது.

அண்மையில் இந்தியா - நேபாள எல்லை பிரச்சினை குறித்து அந்நாட்டு பாராளுமன்றில் பேசிய அந்நாட்டு பிரதமர் பாலேந்திர ஷா, நேபாளமும் பல இந்திய பகுதிகளை ஆக்கிரமித்துள்ளதாக கூறினார். மேலும், மிகவும் சிக்கலான இந்தப் பிரச்சினையை, ஆங்கிலேயர்கள் காலத்தில் வகுத்த எல்லை என்பதால், பிரிட்டனை இணைத்து பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் கூறினார்.

ஆனால், எல்லை விவகாரத்தில் உறுதியாக இருக்கும் மத்திய அரசு, இருநாட்டுஎல்லைப் பிரச்சினையில் எந்தவொரு 3 ஆம் தரப்பிற்கும் இடமில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இதனிடையே, நேபாள பிரதமர் பாலேந்திர ஷாவின் இந்தப் பேச்சுக்கு அந்நாட்டில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

பாலேந்திர ஷா பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி காத்மண்டுவின் மைதிகர் மண்டலாவில் மாணவர் அமைப்புகளும், நேபாளி காங்கிரஸ் சார்புடைய தருண் தளம் அமைப்பும் மாபெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

நேபாளத்தில் வெடித்த கிளர்ச்சி மற்றும் போராட்டங்களினால் ஆட்சியைப் பிடித்த பாலேந்திர ஷாவுக்கு, பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே எதிர்ப்பலை கிளம்பியிருப்பது அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (3)

# ...யை திறந்தாலும் ...ல் தளர்வு இல்லை

## ...க்கா அதிரடி

...ஈரா ...டுள்ள ...டை ...ற்கு ...வித ...ட்ட ...அமெ ...றவுத் ...ச்சர் ...யோ ...வித் ...நளா ...டற்

கான முதன்மைக் காரணியே அந்நாட்டின் அணுசக்தி நடவடிக்கைகளும், செறிவூட்டப்பட்ட யுரேனியம் தயாரிப்புமே ஆகும்.

எனவே, ஈரான் தனது அணுசக்தி திட்டங்களை கைவிட ஒப்புக்கொண்டால் மட்டுமே, அந்த உடன்பாட்டின் அடிப்படையில் தடைகளில் தளர்வுகள் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (3)

# அமெரிக்கா-ஈரான் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இந்தியா அழைப்பு

(டில்லி)


அமெரிக்கா - ஈரான் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

லெபனான், காஸா மீதான இஸ்ரேலின் தொடர் தாக்குதலைக் கண்டித்து அமெரிக்கா உடனான அனைத்துத் தரப்பு அமைதிப் பேச்சுவார்த்தைகளையும் நிறுத்திவைப்பதாக ஈரான் அறிவித்ததைத் தொடர்ந்து, இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

மேற்கு ஆசியாவில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை மறுபடியும் கொண்டு வருவதற்காக அமெரிக்க - ஈரான் இடையே மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும் என இந்தியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளதாவது: “மேற்கு ஆசியாவில் நிகழ்ந்துவரும் முன்னேற்றங்களை கூர்மையாக கவனித்து வருகிறோம்.

அமைதி மற்றும் நிலைத்தன்மை விரைந்து திரும்புவதற்கு, பேச்சுவார்த்தை மட்டுமே முன்நோக்கிச் செல்லும் வழி என்பதுதான், மிகத் தொடக்கத்திலிருந்தே எங்களின் நிலைப்பாடாக இருந்து வருகிறது. இரு தரப்புக்கு இடையிலான பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்க வேண்டும்” என இதன் போது தெரிவித்திருந்தார். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தென்மராட்சியின் நிலத்தடி நீரை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

## இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை

(சாவகச்சேரி)

**தென்மராட்சியின் நிலத்தடி நீரினை பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக அவர்கள் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது உலகச் சுற்றாடல் வாரம் ஆரம்பமாகி, நாடெங்கும் சூழல் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வுகள் பேசப்பட்டு வரும் நிலையில், தென்மராட்சியின் இயற்கை வளம் திட்டமிட்டு அழிக்கப்படுவது கவலையளிக்கிறது. தென்மராட்சியின் பிரதான சூழல் பிரச்சினையான நிலத்தடி நீர்ச் சுரண்டலைத் தடுக்க இக்காலப்பகுதியில் உறுதியான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

தென்மராட்சி பிரதேசம் தனது குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கு நிலத்தடி நன்னீர் வளத்தையே முழுமையாக நம்பியுள்ளது. எனினும் எவ்வித அறிவியல்பூர்வ ஆய்வுகளுமின்றி, உரிய திணைக்களங்களின் அனுமதியின்றி வகைதொகையாக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், சில தனியாருக்குச் சொந்தமான காணிகளில் இருந்து வணிக நோக்கில் பாரவூர்திகள் மூலம் நீர் உறிஞ்சப்பட்டு வருகின்றது. இந்த எல்லையற்ற சுரண்டலால் பொதுமக்களின் சாதாரண கிணறுகள் வற்றிப் போவதுடன், தென்மராட்சியின் நன்னீர் அடுக்குக்குள் கடல்நீர் உட்புகும் பேராபத்தும் ஏற்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக தென்மராட்சி பகுதிக்குள் வெளிமாவட்டங்கள் மற்றும் வெளியிடங்களில் இருந்து "சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்" என்ற பெயரில் பாரிய வாகனங்கள் (போத்தல்கள் மற்றும் கேன்கள்) மூலம் நீர் கொண்டு வரப்பட்டு, எவ்வித கட்டுப்பாடும் இன்றி வீடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்த நீர் எங்கு எடுக்கப்பட்டது? எந்தத் தரத்தில் சுத்திகரிக்கப்பட்டது? அல்லது சாதாரண கிணற்று நீரா? என்பது எவருக்கும் தெரிவதில்லை.

உள்ளூர் மக்களின் ஆரோக்கியத்தை முற்றாகப் பணயம் வைத்து, வெளியிட வணிகக் கொள்ளையர்கள் தென்மராட்சிக்குள் ஊடுருவி நடத்தும் இந்த வர்த்தகம் உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். முறையான தரப்பரிசோதனை சான்றிதழ்கள் இல்லாத வெளிமாவட்ட வாகனங்கள் தென்மராட்சி பிரதேசத்திற்குள் நுழைந்து நீர் விற்பனை செய்வதை அதிகாரிகள் தடுத்து நிறுத்த வேண்டும்.

குடிநீருக்குரிய தரம் இல்லாத இந்த நீர்விநியோகம், எதிர்காலத்தில் தென்மராட்சி பிரதேச மக்களுக்குப் பாரிய சிறுநீரகப் பாதிப்புகள் மற்றும் தொற்றுநோய்களை உருவாக்கும் சுகாதார அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

எனவே தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இதனை ஒரு பிரதான விவாதப் பொருளாகச் சேர்த்து, முறையான தீர்மானங்களை நிறைவேற்றுமாறு பிரதேச செயலாளரிடமும் மக்கள் பிரதிநிதிகளிடமும் எமது இயக்கம் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-30)

# மகோற்சவம்

(கைதடி)

கைதடி வடக்கு அருள்மிகு கயிற்ற சிட்டி கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்

இவ் உற்சவத்தில் எதிர் வரும் ஜூன் மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 28 ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று அன்றைய தினம் இரவு 7.30 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 500 | 700 | 600 | 650 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 | -- | 300 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 300 | 600 | 350 | 600 |
| தக்காளி | 450 | 500 | 500 | 600 | 450 | 420 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 | 200 | 200 | 140 |
| கோவா | 400 | 300 | 300 | 350 | 250 | 320 |
| கரட் | 350 | 400 | 500 | 500 | 450 | 450 |
| பூசணி | 120 | 120 | 100 | 150 | 100 | 80 |
| புடோல் | 300 | 250 | 200 | 300 | 250 | 400 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 400 | 200 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 210 | 250 | 240 | 200 | -- |
| பாகற்காய் | 1800 | 1500 | 1000 | 1600 | 1000 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 300 | 400 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 400 | 300 | 300 | 400 | -- | 300 |
| பயற்றங்காய் | 600 | 300 | 300 | 400 | 450 | 300 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 500 | 400 | 450 |
| பீற்றூட் | 450 | 400 | 400 | 600 | 350 | 500 |
| கறிமிளகாய் | 600 | 500 | 350 | 800 | 400 | 550 |
| முருங்கைக்காய் | 500 | 700 | 600 | 1000 | 800 | 700 |
| போஞ்சி | 650 | '700 | 800 | 700 | 750 | 500 |
| கத்தரிதம்புள்ள | 500 | 350 | 400 | 500 | -- | -- |
| கீரை - 1 பிடி | 200 | 120 | 200 | 150 | -- | 150 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 500 | 450 | 420 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 80-120 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 350 | 350 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 700 | 600 | 600 | 600 | -- | -- |
| முள்ளங்கி | -- | 250 | 200 | 400 | 250 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 60 | -- | 40 |
| வல்லாரை | 100 | 70 | 100 | 80 | -- | 50 |
| ஈரப்பலா | -- | -- | 150 | 280 | -- | -- |

# இராசிபலன்

04.06.2026
வைகாசி 21, வியாழக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 9.33 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 2.00 மணிவரை

சுப நேரம் -7.22-8.52 மணிவரை
இராகு காலம் -1.22- 2.52 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்- திருவாதிரை

வளவன்

**மேஷம்** கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**மகரம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், திடீர் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**கன்னி** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மீனம்** பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சாதுரியமில்லாமல் நீங்கள் எதையும் கற்றுக்கொள்ள முடியாது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02

XVIII

புருசோத்தமன்

# இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்



இலண்டனில் இருந்து தருவிக்கப்பட்ட காண்டாமணி



இலங்கைத் திருநாட்டை சிவபூமி எனத் திருமூலர் போற்றித் துதிசெய்தார்.

இலங்கை வேந்தனாக இருந்த இராவணேஸ்வரன் மிகச்சிறந்த சிவபக்தன்.

அவனின் திருமேனியில் இருந்த திருநீற்றை விதந் துரைத்த திருஞானசம்பந்தர் "...இராவணன் மேலது நீறு..." என்றார்.

ஆக, இதிலிருந்து இந்த நாட்டின் ஆதிக் குடி சைவத் தமிழ் என்பது உறுதியாகிறது.

இதனை இன்னும் ஆதாரப்படுத்துவதாக இந்த நாட்டின்கண் அமையப் பெற்ற பஞ்ச ஈச்வரங்கள் அமைகின்றன.

ஆம், திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் இலங்கை வேந்தன் இராவணேஸ்வரனால் அமைக்கப்பெற்றது.

அன்னியராட்சியில் கோணேஸ்வரர் கோயில் அழிக்கப்பட்டமை அன்னியர்கள் எமக்கு இழைத்த பெரும் பாதகச் செயலாகும்.

இயற்கை வனப்பும் நித்தமும் அலை ஓசை எழுப்புகின்ற கடலும் சூழ்ந்த கோணமாமலையானது, இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழர் என்பதற்கான தொல்லியல் சான்றாதாரமாகும்.

எனினும் திருக்கோணேஸ்வரத்தை எப்படியும் ஆக்கிரமித்து, அதனைப் பௌத் தர்களின் இடமாகக் காட்டுவதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கி ன்றன.

உண்மை. திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு என இலண்டனில் இருந்து தருவிக்கப்பட்ட காண்டாமணியை இன்னமும் மணிக் கோபுரத்தில் எழுப்பி கோணேஸ்வரப் பெருமானின் மணியோசை திருக் கோணேஸ்வரம் முழுமையிலும் ஒலிப்பதற்கு முடியாமல் உள்ளது.

உண்மை. திருக்கோணேச்சர ஆலயத்தில் புதிய காண்டா மணியை ஏற்றுவதற்கான மணிக்கோபுரத்தை அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் தடை விதித்துள்ளது எனில், எங்கள் சைவ சமயத்திற்கு இந்த நாட்டில் இருக்கக் கூடிய இன்னல்கள் எத்தகையது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ஆக, வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வர ஆலயத்தை மழுங்கடித்து அதனை அப்படியே அமிழ்த்துகின்ற ஈனச் செயலில் தொல்லியல் திணைக்களம் ஈடுபட்டிருக்கின்றது.

எனினும் இது பற்றி எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பாராளுமன்றத்தில் பேசவில்லை என்பது தான் விசித்திரமான உண்மை.

ஆம், திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கென லண்டனில் இருந்து கொண்டு வரப்பட்ட காண்டாமணியை இன்னமும் ஏற்ற முடியாமல், தொல்லியல் திணைக்களம் தடுத்து வைப் பது ஏன்?

இந்த நாட்டின் தொல்லியல் திணைக்களம் என்பது தனித்து சிங்களவர்களுக் கானதா? என தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் யாராவது கேட்டிருந்தால், மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமானின் ஆலயத்தில் அந்தக் காண்டாமணி ஒலித்திருக்கும்.

எனினும் இது குறித்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பேசாமல் மௌனமாக இருக்கிறார்கள் எனின், அதற்குக் காரணமும் உண்டு.

ஆம், சிங்களவர்களை - பௌத்தத்தை எதிர்ப்பதில் நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்னிற் பவர்கள் அல்ல. அப்படிப் பின்னிற்பவர்களாயின், அவர்கள் தையிட்டி விகாரை விடயத்திலும் மௌனமாகவே இருந்திருப்பர்.

ஆனால் தையிட்டி விகாரை தொடர்பில் வெளிக் காட்டப்படும் எதிர்ப்பு எத்தகையது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அப்படியானால், திருக் கோணேஸ்வரர் ஆலயத்தில் காண்டாமணி தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வாய்திறக்காமல் இருப்பதற்கு மூல காரணம்; தாங்கள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்காகக் குரல் கொடுத்தால், தங்களை இந்துத்துவவாதிகளாக கத்தோலிக்கத் தமிழ் மக்கள் கருதி, தங்களுக்கு வாக்களிக்காமல் விட்டு விடுவார்கள் என்ற பயமேயன்றி, மற்றும்படி அவர்களின் மௌனோற்சவத்திற்கு வேறு காரணம் ஏதுமில்லை.

ஆம், இதை நாம் கூறும் போது, பௌத்த விகாரைகள் தொடர்பில் எதிர்க்கின்ற நம்மவர்கள் திருக்கோணேஸ்வரத்தில் நடக்கின்ற ஆக்கிரமிப்பை - தொல்லியல் திணைக் களத்தின் தொல்லை களை என்றாவது எதிர்த்தார் களா?அல்லது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஒன்றிணைந்து திருக் கோணேஸ்வரத்தில் உண்ணாவிரதமிருந்து தங்களின் எதிர்ப்பைக் காட்டினார்களா என்றால் எதுவுமில்லை.


இந்த நிலையில் திருக் கோணேஸ்வரர் ஆலயத்தை இந்திய மத்திய அரசு புனரமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகர் கலாநிதி ஆறு.திருமுருகன் முன் வைத்தார்.

அந்தக் கோரிக்கையானது கோணேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தந்திருந்த இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் அவரால் கையளிக்கப்பட்டது.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அவனுக்கு விபத்து வந்தால் அதன் பழி தன் தலையில் நேராக விழும். ஆகையால் கொள்ளிடத்தைத் தாண்டிக் கடம்பூருக்கு உடனே போய்ச் சேரவேண்டும். அதற்கு முன்னால், குடந்தைக்குச் சென்று, தஞ்சைக்கும், நாகைக்கும் எச்சரிக்கை அனுப்பிவிட்டுப் போவது நல்லது. பின்னர், விதிவசம் போல் நடந்து விட்டுப் போகிறது. தாம் செய்யக்கூடியது அவ்வளவு தான்!

பழுவேட்டரையர் எழுந்திருக்க முயன்றார். உடம்பெல்லாம் ரணமாக வலித்தது. மரம் விழுந்திருந்த இடம் மார்பில் பொறுக்க முடியாத வேதனையை உண்டாக்கிற்று. ஒரு கால் முறிந்து விட்டது போல் தோன்றியது. தேகம் முழுவதும் பல்வேறு காயங்கள் பட்டிருந்தன.

அவற்றையெல்லாம் அந்த வீரக் கிழவர் பொருட்படுத்தவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு ஒரு பெரும் முயற்சி செய்து எழுந்து நின்றார். சுற்று முற்றும் பார்த்தார். நல்ல வேளையாக, அவருடைய மரணத்துக்காகக் காத்திருந்த நரிகள் அதற்குள் ஓடிப் போய்விட்டிருந்தன. தூமகேது விழுந்த போது உண்டான ஒளி வெள்ளத்தைக் கண்டு மிரண்டு அவை ஓடிப் போயின போலும்!

குடந்தை நகரம் அங்கிருந்து எந்தத் திசையில் இருக்கலாம் என்பதை ஒருவாறு நிர்ணயித்துக் கொண்டு புறப்பட்டார். திடமாகக் கால்களை ஊன்றி வைத்து நடக்கத் தொடங்கினார். வழியெல்லாம் புயல் அடித்து மரங்கள் விழுந்து கிடந்தன. பெருமழையினாலும் கொள்ளிடத்து உடைப்பினாலும் வெள்ளக் காடாக இருந்தது. இந்த இடையூறுகளையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் பழுவேட்டரையர் நடந்தார். உள்ளத்தின் கொந்தளிப்பு உடலின் சிரமங்களையெல்லாம் மறந்து விடச் செய்தது. ஆனாலும் நேரம் போய்க் கொண்டே இருந்தது.

பொழுது விடிந்து இரண்டு ஜாம நேரம் ஆன சமயத்தில் குடந்தை நகரை அவர் அணுகினார். அந்த மாநகரின் மத்தியப் பிரதேசத்துக்குப் போக அவர் விரும்பவில்லை. அவரை இந்தக் கோலத்தில் பார்த்தால் ஜனங்கள் வந்து சூழ்ந்து கொள்வார்கள். என்ன, ஏது என்று கேட்பார்கள். அவர் செய்ய விரும்பிய காரியத்தைத் துரிதமாகவும் திறமையாகவும் செய்ய முடியாமற் போய் விடும்.


ஆகையினால் நகரின் முனையிலேயே, ஜன நெருக்கமில்லாத இடத்தில், யாரையாவது பிடித்து, தஞ்சைக்கும் நாகைக்கும் ஓலை அனுப்ப வேண்டும். பிறகு ஒரு வாகனம் சம்பாதித்துக் கொண்டு கடம்பூருக்குக் கிளம்ப வேண்டும். துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள ஜோதிடர் ஞாபகம் அவருக்கு வந்தது. ஆம் அது தனிப்பட்ட பிரதேசம் அக்கம் பக்கத்தில் வேறு வீடுகள் இல்லை.

ஜோதிடர் தகுந்த மனிதர் இனிய இயல்பு படைத்த மனிதர். இராஜ குடும்பத்துக்கும் முதன் மந்திரிக்கும் வேண்டியவர். அதனால் என்ன? யாராயிருந்தாலும் இந்தக் காரியத்தைச் செய்வார்கள். இராஜ குடும்பத்துக்கு வேண்டியவராகயிருப்பதால் இன்னும் ஆர்வத்துடன் செய்வார்.

(தொடரும்)




# ஆலமரமும் வௌவால்களும்



(01.06.2026 தொடர்ச்சி)

அது இரவு இரை தேடச் சென்று விட்டு மறுநாள் அதிகாலை பொந்திற்குத் திரும்பியது. வழக்கத்திற்கு மாறாக நூற்றுக்கணக்கான வௌவால்கள் மரத்தில் அடைந்து கிடப்பதைப் பார்த்தது! வௌவால்களுக்கு ஆலம்பழம் என்றால் ரொம்பப் பிடிக்கும்! அவைகள் பழத்தை உண்ண வந்திருக்கும் என்று எண்ணிக் கொண்டது. ஆனால் அடுத்தடுத்த நாட்களிலும் வௌவால்கள் அங்கேயே இருப்பதைக் கண்ட ஆந்தை மரத்திடம் பேச்சுக் கொடுத்தது.

"வந்தோம் பழத்தைத் தின்றோம் போனோம் என்று இல்லாமல், இதுகள் ஏன் இங்கேயே அடைந்து இருக்கின்றன?" என்று கேட்டது. "அவை நம் விருந்தாளிகள் கிடையாது! இனிமே இங்கு தான் தங்கப் போகுகிறார்கள்!" என்றது ஆலமரம். இதைக் கேட்ட ஆந்தையின் முகம் சுருங்கி விட்டது.

பரந்து விரிந்த அந்த மரத்தின் ஒரு பகுதியில் கிளிகள் வசித்து வந்தன. மைனாக் கூட்டமும் இருந்தது. ஆனால் அவைகள் பகற்பொழுதில் விழித்திருந்து இரை தேடிப் பிறகு இரவில் ஓய்வெடுக்கும் பறவைகள்.

ஆந்தையோ, இரவில் விழித்திருந்து பகலில் ஓய்வெடுக்கும் பறவை. இதனால் மற்ற பறவைகள் பெரும்பாலும் ஆந்தையை நேருக்கு நேர் சந்திப்பதில்லை. அப்படியே பார்க்க நேர்ந்தாலும் ஆந்தையின் தோற்றத்தைக் கண்டு அஞ்சி அவைகள் பின் வாங்கி விடும். அந்தத் தாய் மரத்தின் பொந்தில் வசித்து வந்த ஆந்தை கிட்டத்தட்ட அந்த மரத்தின் ராஜாவாக இருந்து வந்தது. ஆனால் வௌவால்கள் இரவாடிகள் (இரவு விழித்திருக்கும்). ஆந்தை இன்னொரு இரவாடியுடன் தனது வசிப்பிடத்தை பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. ஆந்தை சிறு வௌவால்களை அவ்வப் போது பிடித்து உண்ணும் தான். ஆனால் அளவில் பெரிய இந்தப் பழந்தின்னி வௌவால்களை அவைகள் கூட்டமாக இருக்கும் போது எதுவும் செய்து விட முடியாது. ஆந்தை மரத்திடம் மீண்டும் பேச்சுக் கொடுத்துப் பார்த்தது.

"வௌவால்கள் பறவையே கிடையாது! பாலுட்டி வகையைச் சேர்ந்த விலங்கு. பார்ப்பதற்கு அருவெறுப்பா இருக்கு! மரம் முழுக்கத் தலைகீழா வேற தொங்கிக் கொண்டிருக்கு! இவற்றை உன்னோட கிளைகளிலே அடைய விடலாமா? இதனால் உன்னோட அழகு கெடவில்லையா? இதுகளை வேறு எங்கயாவது வசிக்கச் சொல்லு!" என்றது ஆந்தை. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உற்ற நேரத்தில் வெளியிடப்பட்ட மாணவர் ஒன்றியத்தின் அறிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடத்தில் வெசாக் கூடுகள் சேதமாக்கப்பட்ட விவகாரம் பேசுபொருளாகியது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் வெசாக் கூடுகள் சேதமாக்கப்பட்டன என்ற செய்தி சிங்கள மாணவர்களிடத்தும் தென்பகுதி மக்களிடத்தும் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் சாதாரணமான தன்று.

ஆம், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடத்தில் அமைக்கப்பட்ட வெசாக்கூடுகள் சேதமாக்கப்பட்டன என்ற செய்தி வெறுமனே **"சேதம்"** என்பதோடு நின்று விடக்கூடியதல்ல.

மாறாக, அது பௌத்த மதத்திற்கு எதிரானதாக – சிங்கள மாணவர்களுக்கு விரோதமானதாக நிகழ்த்தப்பட்ட சம்பவமாகவே பார்க்கப்படும். அதாவது, மேற்போந்த செய்தி இந்த நாட்டில் இன, மத வன்மத்தை தூண்ட வல்லன.

தவிர, தற்போது ஜனாதிபதி அநுரவின் ஆட்சியில் இனவாதம் – மதவாதம் என்பன அடக்க நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. அதேநேரம் இனவாத சிந்தனை ஒடுங்க வேண்டும் என்ற மனநிலை நாட்டு மக்களிடமும் எழுகை பெற்றுள்ளது.

உண்மை. கடந்த காலங்களில் இந்த நாட்டில் ஏற்பட்ட இன, மத வாதங்களால் கொல்லப்பட்ட மக்கள் ஏராளம். அதற்கான இழப்புகள் பல. இந்தக் கொடும்பாவச் செயல்கள் பேரினவாதக் கும்பல்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட விஷமப் பிரசாரங்களால் நடந்தவை.

ஆம், இந்த நாட்டில் மனிதக் குருதி ஓடுவதைப் பார்த்து மகிழ்கின்ற அரக்கர் கூட்டத்தின் குருதிப் பசி இன்னமும் தீர்ந்தபாடில்லை.

ஆகையால் அவர்கள் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களின் போதெல்லாம் தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் என்பதான இனவாதத் தீயை மூட்டுவர்.

நிலைமை இதுவாக இருக்கும் போது, யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடத்தில் வெசாக் கூடுகள் சேதமாக்கப்பட்டதான சம்பவத்தைப் பொதுமைப்படுத்தும் போது, நாங்கள் சொன்னோம் நீங்கள் கேட்கவில்லை என்ற சத்தத்தோடு பேரினவாதப் பேய்கள் அங்கு சன்னதம் கொள்ளும்.

இங்குதான் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவப் பீட மாணவர் ஒன்றியம்; காலம் உணர்ந்து, நிலைமை அறிந்து, காத்திரமான அறிக்கையை உற்ற நேரத்தில் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் நடுநிலைத் தன்மை – அதன் உண்மைத் தன்மை – அதற்குள் இருக்கக்கூடிய வெளிப்படைத் தன்மை என்பவற்றின் நேர்த்தி கண்டு வியக்காமல் இருக்க முடியாது.

ஆம், வெசாக் தின அனுஷ்டிப்பு மாணவர் ஒன்றியத்தின் ஒப்புதலுடன் நடந்தன – வெசாக் தின நிகழ்வுகளுக்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்கினோம் – ஒரு சில விசமிகள் இழைத்த கபடத்தனத்தை பொதுமைப்படுத்தி, மக்கள் சமூகத்தில் இனவன்மத்தை ஏற்படுத்தி விடாதீர்கள் எனும் வேண்டுகோளுடன் விடுக்கப்பட்ட அந்த அறிக்கை நம் வழமையான அறிக்கை கலாசாரத்தினின்றும் விலகி, ஒற்றுமையினூடான மனித வாழ்வின் முக்கியத்துவத்தையும் உணர்த்தியுள்ளது.

ஆக, குறித்த மாணவர் ஒன்றியத்தின் அறிக்கை காலம் உணர்ந்த தக்க செயலாம்.

# தமிழ் இன அழிப்பின் நினைவுச் சின்னமாக வட்டுவாகல் பழைய பாலத்தை பேண வேண்டும்

## முல்லை. ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ரவிகரன் எம்.பி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு–வட்டுவாகல் பழைய பாலத்தின் ஒரு பகுதியாவது தமிழ் இன அழிப்பின் நினைவுச்சின்னமாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்ற நிலையில், குறித்த கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றபோது, பழைய வட்டுவாகல் பாலத்தின் ஒரு பகுதி நினைவுச்சின்னமாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கோரியிருந்தோம்.

குறிப்பாக எரித்து அழிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொதுநூலகம் நினைவுச்சின்னமாக பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே இந்த விடயத்திலும் அதே போல தவறிழைப்பதற்கு இடமளிக்கமுடியாது என்பதையும் அதன்போது சுட்டிக்காட்டியிருந்தோம்.

இருப்பினும் வட்டுவாகல் பாலம் இடித்தழிப்புச் செய்கின்ற செயற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் தமிழ் இன அழிப்புச் செயற்பாட்டின் நினைவுச்சின்னமாக வட்டுவாகல் பாலத்தின் ஒருபகுதியைவிட்டுவைக்குமாறு மக்களாலும் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

எனவே வட்டுவாகல் பழைய பாலத்தின் ஒரு பகுதியாவது தமிழ் இன அழிப்பின் சாட்சியாக பேணிப்பாதுகாக்கப்படவேண்டும்.

இந்த விடயத்தில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் உபாலி சமரசிங்கவும் கவனம்செலுத்த வேண்டும் என்றார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க பதிலளிக்கையில்,

இது ஒரு மனிதாபிமானக் கோரிக்கையாகும். இருப்பினும் தொழில்நுட்ப ரீதியாக பழைய பாலத்தை உடைக்காமல் விடுவதற்கு வாய்ப்பிருக்கின்றதா? என்பதை பரிசீலிக்க வேண்டும்.

குறித்த பழைய வட்டுவாகல்பாலத்தை உடைக்காமல் விடுவதால் நீரோட்டம் தடைப்படும் வாய்ப்புக்கள் இருக்கின்றதா? என்பது தொடர்பில் ஆராய வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதன்போது குறிக்கிட்ட ரவிகரன் எம்.பி, நீரோட்டம் தடைப்படும் வகையில் பழையவட்டுவாகல் பாலத்தை விடுமாறு நாம் கோரவில்லை.

தொடக்கப்பகுதி அல்லது முடிவிடத்தில் பாலப்பகுதியை நினைவுச்சின்னமாக விடுமாறே நாம் கோருகின்றோம்.

நிச்சயமாக வட்டுவாகல் பழையபாலத்தின் ஒரு பகுதி தமிழ் இன அழிப்பின் நினைவுச்சின்னமாகப் பேணப்பட வேண்டும் என மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ந-7)

## உயிர்த்தஞாயிறு தாக்குதல் வழக்கு

# உயிர்மாய்க்கும் நிலையில் உள்ளாராம் சுரேஷ் சலே

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலிலுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்ளும் மன நிலையில் இருப்பதாக அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று (03) கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தாக்குதலைத் திட்டமிட்டதான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, விசாரணைகளில் மூன்றாவது சந்தேக நபராகப்பெயரிடப்பட்ட சுரேஷ் சலே சார்பாக, ஜனாதிபதி சட்டத்தரணி ஷவேந்திர பெர்னாண்டோ மற்றும் சட்டத்தரணி அசித் சிறிவர்தன ஆகியோர் தாக்கல் செய்த மனுவின் மூலம் இந்த விடயங்கள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டன.

மேலும் சுரேஷ் சலே குற்றப் புலனாய்வுத் துறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுவரை வெளியிடப்பட்ட தடயவியல் மருத்துவ அறிக்கைகளின்படி அவர் கடுமையான பதட்டம், மனச்சோர்வு மற்றும் அதிர்ச்சிக்குப் பிந்தைய மன அழுத்தக் கோளாறு (PTSD) ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

அவர் எதிர்கொண்டதாகக் கூறப்படும் மனிதாபிமானமற்ற செயல்களே இந்த நிலைகளுக்கு முக்கிய காரணம் என்று வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தக் கடுமையான மனநலப் பாதிப்பைக் கருத்திற்கொண்டு, சுரேஷ் சலேவை குற்றப் புலனாய்வுத் துறையின் காவலில் இருந்து உடனடியாக விடுவித்து, அவரை மற்றொரு பொருத்தமான இடத்திற்கு மாற்றுமாறும் அவருக்குத் தேவையான மனநல மருத்துவ சிகிச்சையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் வழக்கறிஞர்கள் நீதிவானிடம் கோரியுள்ளனர்.

இருப்பினும் இந்த மனு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, அரச தரப்பு தலைமை வழக்கறிஞர் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை அல்லது பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் எந்த வழக்கறிஞரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

எனவே இந்த மனு தொடர்பாக தனது வாதங்களை முன்வைப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை இன்று (04) பிற்பகல் 2.00 மணிக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நீதிபதி பசன் அமரசேன உத்தரவிட்டார். (ந-7)

# பச்சிளம் குழந்தையை கிணற்றில் வீசிய தாய்

## பொலிஸாரால் கைது

(காலி)

காலி, எல்பிட்டிய பகுதியில் பச்சிளம் குழந்தையை கிணற்றில் வீசிய தாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த பெண் இரண்டு மாதங்களே நிரம்பிய பெண் குழந்தையை கிணற்றில் வீசியுள்ளார்.

குழந்தையை கிணற்றில் வீசிய பின்னர் குறித்த பெண் சத்தமிட்டுள்ளார். இந்த அலறல் சத்தத்தைக் கேட்டு விரைந்து செயற்பட்ட குழந்தையின் தந்தை, உடனடியாக குழந்தையை மீட்டு எல்பிட்டிய ஆதார மருத்துவமனையில் அனுமதித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குழந்தையின் தாயாரைக் கைது செய்துள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 26.05.2026 முதல் 13.06.2027 வரை



**எதையும் சமாளிக்கும் ஆற்றல் பெற்ற தனுசு இராசி வாசகர்களே!**

உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், 26.5.2026 அன்று அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கிறார். 8இல் குரு வந்தாலே எல்லா வழிகளிலும் தொல்லை வரும் என்பார்கள். கெட்டி மேளம் கொட்டுவதில் தடை, செல்வாக்கை தக்க வைத்துக் கொள்வதில் இடையூறு உருவாகும். தீட்டிய திட்டங்கள் திசைமாறிச் செல்லும். சுய ஜாதக அடிப்படையில் குரு இருக்கும் இடமும், அதன் சார பலமும் பார்த்து யோகபலம் பெற்ற நாளில் வழிபாடுகளை மேற்கொண்டால் கெடுபலன் குறையும்."

## எதிலும் அலைச்சல் பணவிரயம்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் குரு பகவான். அவர் உச்சம் பெற்று 8ஆம் இடத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. மன தைரியம் குறையும். மற்றவர்களின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாகும் சூழ்நிலை உருவாகும். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. உடன் இருப்பவர்களை நம்பிச் செயற்படவும் முடியாது. அனுபவஸ்தர்களின் அறிவுரையும், ஆன்மிகப் பெரியோர்களின் ஆசியும்தான் உங்களை வழிநடத்திச் செல்லும்.

**வெற்றி தரும் குரு பார்வை**

நவக்கிரகங்களில் சுப கிரகமாக விளங்கும் உங்கள் இராசிநாதனான குரு, அஷ்டம ஸ்தானத்திற்கு செல்கிறார். கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரம் இது. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. கொடுக்கல் - வாங்கலில் ஏமாற்றத்தை சந்திப்பீர்கள். குருவின் பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. 2ஆம் இடத்தில் குரு பார்வை பதிவதால் நெருக்கடி நிலை மாறும். சரியான நேரத்தில் போதுமான தொகை கைகளில் புரளும். ஆனால் சேமிக்க இயலாது. திடீர், திடீரென வரும் விரயங்களால் மனக்கலக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள்.

குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் வீடு கட்டிக் குடியேற வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறும். ஆனால் பத்திரப்பதிவிலும், கட்டிடம் கட்டும் முயற்சியிலும் தடைகள் அதிகரிக்கும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. இடமாற்றம், ஊர் மாற்றம்,வாகன மாற்றம் போன்றவை ஒன்றன் பின் ஒன்றாக நிகழும். மனப்பயம் அதிகரிக்கும். பிறருக்குப் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்ததன் விளைவாக பிரச்சினைகள் அதிகரிக்கும்.

12ஆம் இடத்தை குரு பகவான் பார்ப்பதால், சுபவிரயங்கள் அதிகரிக்கும். உடன பிறப்புகள் அல்லது உங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்வதற்காக முயற்சித்தால் அது கடைசி நேரத்தில் கைகூடும். முன்னேற்றப் பாதையில் சறுக்கல்கள் உண்டு. முக்கியப் புள்ளிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். வேலை மாற்றம் செய்யலாமா? என்று சிந்திக்கும் நேரம் இது.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

26.5.2026 முதல் 10.6. 2026 வரை புனர்பூச நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது, நல்ல சம்பவங்கள் நிறைய நடைபெறும். பொருளாதார நிலை உயரும். திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளால் நன்மை கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்த இடப்பிரச்சினை அகலும். பிள்ளைகளின் கல்விப் பயணம் தொடரும், கடல்தாண்டிச் சென்று படிக்க வேண்டும் அல்லது பணி புரிய வேண்டுமென்று நினைத்தவர்களின் முயற்சி கைகூடும். வாகனத்தைச் சீர்செய்ய முன்வருவீர்கள்.

11.6.2026 முதல் 10.8.2026 வரை பூசம் நட்சத்திரக் காலில் சனி சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார பற்றாக்குறை அகலும்.உங்கள் இராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான்.தன - சகாய ஸ்தானாதிபதியான அவரது சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது, புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். நிலையான வருமானம் வர வழியமைத்துக் கொள்வீர்கள். பாதை மாறிச் சென்ற உறவினர்கள் மீண்டும் உங்களை வந்துசேர்வர். பொதுக்காரியங்களில் ஈடுபட்டு புகழ் குவிப்பீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். இந்த காலத்தில் எதைச் செய்ய நினைத்தாலும் அது ஈடேறும்.




11.8.2026 முதல் 19.10.2026 வரை மற்றும் 13.2.2027 முதல் 12.6.2027 வரை ஆயில்யம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது, திருமண முயற்சிகள் கைகூடும். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதி பதியானவர், புதன். அவரது சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவீர்கள். கடல் தாண்டிச் செல்லும் யோகம் உண்டு. வியாபாரம் வெற்றி நடை போடும். விருதுகளும், பட்டங்களும் பெறும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் செயற்பாடுகள் மேலதிகாரிகளை ஆச்சரியப்பட வைக்கும்.

20.10.2026 முதல் 12.2.2027 வரை மகம் நட்சத்திரக்திரக் காலில் குருபகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, ஆரோக்கியத் தொல்லை அகலும். சிம்ம குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 1,3,5 ஆகிய இடங்களில் பதிகின்றது. ஜென்ம இராசியைக் குரு பார்ப்பதால் நன்மைகள் அதிகரிக்கும். அன்றாடப் பணிகளை செவ்வனே செய்து முடிப்பீர்கள். நெருக்கடி நிலை மாறும். உற்றார் உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். குடும்ப முன்னேற் றம் கூடும். கொடுக்கல் வாங்கலில் ஆதாயம் கிடைக்கும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

13.11.2026 அன்று ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. மகரராகுவும், கடக கேதுவும் உங்கள் வாழ்க்கையில் மாற்றங்களையும், ஏற்றங்களையும் கொடுக்கப்போகிறார்கள். தனஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து அலை மோதும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். ஆனால் அஷ்டமத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லை மிகுதியாகும். உழைப்பின் பலன் மற்றவர்களைச் சென்றடையும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

வியாழக்கிழமை தோறும் விரதம் இருந்து குரு பகவானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

அஷ்டமத்து குருவின் ஆதிக்கம் இருப்பதால் உடல்நிலையில் மிகமிக கவனம் தேவை. ஆதாயத்தைக் காட்டிலும் விரயங்களே அதிகரிக்கும். சேமிப்பு கரையும். உங்களிடம் உள்ள பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். கணவன்-மனைவி விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தாய் மற்றும் உடன்பிறப்புக்களை அனுசரித்துச் சென்றால் ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பெயரில் அசையா சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பணியில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உறுதியாகலாம்.

**குருவின் வக்கிர காலம்**

கடகம் மற்றும் சிம்மம் ஆகிய இராசிகளில் குரு பகவான் வக்ரம் பெறும் பொழுது, உங்கள் இராசிநாதனாகவும் குரு விளங்குவதால் எதிலும் கவனமாக செயற்படுவது நல்லது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். வெளிநாட்டில் இருப்பவர்கள் குடியுரிமை கிடைக்காமல் திரும்ப நேரிடும். வீடு, இடம் வாங்குவதில் பிரச்சினையும், கட்டிடப் பணி பாதியில் நிற்கின்றதே என்ற கவலையும் ஏற்படும். தைரியமும், தன்னம்பிக்கையும் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தொழில் பங்குதாரர்களால் தொல்லை உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நிரப்பக் கொண்டு...

எது.

வங்கிக் கிளைக்கு அருகில் வைத்து, பணப் பைகளை (Money Bags) குறித்த நபர் பறித்துக்கொண்டு தப்பியோடியுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து பணத்தைக் கொள்ளையடித்துத் தப்பிய சந்தேக நபரை உடனடியாகக் கைது செய்வதற்காகவும், கொள்ளையிடப்பட்ட பணத் தொகையை மீட்பதற்காகவும் மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரிகளின் வழிகாட்டலில் விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுத் தீவிர தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டுள்ளது. (ந-7)

## நாட்டை விட்டு...

தடை விதித்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.

கோட்டை நீதிவான் பசன் அமரசேன, இந்த உத்தரவைப் பிறப்பித்ததுடன் அதனை உடனடியாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை கட்டுப்பாட்டாளருக்கு அனுப்புமாறும் நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரச புலனாய்வு சேவையின் முன்னாள் இயக்குநராக இருந்த ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சல்லே தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## இலங்கை...

10 முதல் 12.5 சதவீதம் வரை மேலதிக வரியை விதிப்பதற்கு அமெரிக்க நிர்வாகம் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளதாக ரொயிட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இதற்கமைய கனடா, மெக்சிகோ, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா உள்ளிட்ட சில நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீத மேலதிக வரியை விதிக்கப் பிரேரிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை உட்பட மேலும் 45 நாடுகளுக்கு 12.5 சதவீத மேலதிக வரியை விதிக்க பிரேரிக்கப்பட்டுள்ளது.

கட்டாய உழைப்பைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் இறக்குமதியைத் தடை செய்தல் மற்றும் அந்தச் சட்டங்களை திறம்பட நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக இலங்கை போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாக அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் ஆடை மற்றும் துணி இறக்குமதிகளுக்குக் குறைந்த வரி விகிதங்களின் கீழ் ஒரு குறிப்பிட்ட அளவை அமெரிக்க சந்தைக்குள் அனுமதிக்கும் சிறப்பு பொறிமுறை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்தப் பிரேரணைகள் குறித்த பொதுமக்களின் கருத்துக்கள் ஜூலை 6ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதுடன், ஜூலை 7ஆம் திகதி அது தொடர்பான பொது விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## இந்திய உயர்ஸ்...

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்றுப் புதன்கிழமை நெடுந்தீவுக்கான விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்களுக்கான நூலகத்தினை அவர் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

அத்துடன் நூலகத்திற்குத் தேவையான ஒரு தொகுதி நூல்களையும் பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

அத்துடன் பாடசாலை நூலகத்திற்கு தளபாடங்கள், 100 மாணவர்களுக்குப் புத்தகப் பைகள், கற்றல் உபகரணங்கள், இசைக்கருவிகள் என்பனவற்றையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் இந்திய தூதரகத்தின் உயர் அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலாளர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ந-7,33)

## சிவகங்கை...

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று புதன்கிழமை காலை நாகபட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்த, சிவகங்கை கப்பலானது மதியம் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

பின்னர் மீண்டும் மாலை காங்கேசன்துறையில் இருந்து நாகபட்டினம் நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தது.

இதன்போது இந்தியாவில் இருந்து 93 பயணிகள் இலங்கைக்கு வருகை தந்ததுடன், 79 பயணிகள் இலங்கையில் இருந்து இந்தியாவை நோக்கிப் பயணித்தனர்.

இதேவேளை இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா காங்கேசன்துறைமுகத்துக்கு நேற்று விஜயம் செய்து, சிவகங்கை கப்பல் அதிகாரிகளுடனும், மாலுமிகளுடனும் கலந்துரையாடினார்.

அத்துடன் கப்பல் போக்குவரத்துக் குறித்து பயணிகளிடமும் கருத்துக்களைக் கேட்டறிந்ததுடன் கப்பலையும் பார்வையிட்டார்.

இதன்போது, யாழ்ப்பாணம் இந்திய துணை தூதுவர் சாய் முரளி, கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கே.எம். ஜெயசீலன், கப்பல் நிறுவனத்தின் அதிகாரியான பகீரதன், கப்பல் நிறுவனத்தின் இந்தியாவுக்கான சந்தைப்படுத்தல் முகாமையாளர், கப்பல் நிறுவனத்தின் ஏனைய அதிகாரிகள், சுங்கத்துறை அதிகாரிகள் மற்றும் கடற்படை அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ந-7,33)

## தாயகப்...

சியைச் சேர்ந்த பாடகர் ஒருவர் பகிர்ந்திருந்தார்.

அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இளைஞனை நேற்று முன்தினம் கைது செய்து விசாரணைகளின் பின், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது, இளைஞன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீண்ட சமர்ப்பணங்களை மன்றில் முன்வைத்த போதிலும், பிணை வழங்க பொலிஸார் கடும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், இளைஞனை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு மன்று உத்தர விட்டுள்ளது. (ம-7,33)


மஹஜன சம்பத — திகதி 2026.06.03 — சீட்டிழுப்பு இலக்கம் 6207 — M 0 5 0 7 5 5
அத சம்பத — M 0 7 5 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0782

சுப தவசக் — திகதி 2026.06.03 — சீட்டிழுப்பு இலக்கம் 8323 — தனுசு 04 09 62 — 5383

தன நிதானய — திகதி - 2026.06.03 — சீட்டிழுப்பு இலக்கம் - 2237 — Y 01 14 26 42 Y

மெகா பவர் — திகதி 03/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2555 — J 16 01 33 43 68

ஜய — திகதி 2026.06.03 — சீட்டிழுப்பு இலக்கம் 0475 — W 0 2 8 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4449 — சீட்டிழுப்பு திகதி 03.06.2026 — D 14 64 67 72

ஹதஹன HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2026.06.03 — சீட்டிழுப்பு இலக்கம் 1516 — மேடம் 02 09 10 56 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பிரி தன சம்பத — 03.06.2026 — வெற்றி வாரம் 0915 — G 2 3 4 2 6 0 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,459,128.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3181 — 25000 பணப் பரிசு 56034 — சீட்டிழுப்பு திகதி 2026.06.03 — புதன்கிழமை — 20 27 36 38 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.130,867,944.00

சனிதா — திகதி 03.06.2026 — வெற்றி வாரம் 5342 — 25 47 73 75 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,239,867.20 — 95272

சசிரி — வெற்றி வாரம் 1011 — சீட்டிழுப்பு திகதி 03.06.2026 — புதன்கிழமை — 06 39 46 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.3,927,240.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4893 — சீட்டிழுப்பு திகதி 03.06.2026 — புதன்கிழமை — 07 09 36 62 சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,683,282.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — K 20 01 02 19 63 — 2357 — 03.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.283,170,442.40


அத கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 3007 — சீட்டிழுப்பு திகதி 2026.06.03 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,864,752.80 — 03 04 06 65 T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

மலர்வு
30 - 06 - 1951

உதிர்வு
03 - 06 - 2026



## சண்முகம் லோகேஸ்வரன்

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் லோகேஸ்வரன் அவர்கள் நேற்று 03.06.2026 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - வேவி தம்பதிகளின் பாசமிகு புதல்வரும் பூமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும் சுபாஜினி, துஷி, பிரதீபன், ஹம்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஜன், தயா, இந்து ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லிதியா, டிவோனா, ரித்விக், சாய்கீர்த்தி, ரேஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 04.06.2026 வியாழக் கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடைஇந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உடுவில் தெற்கு,
உடுவில். (2383)

தகவல் :
குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5779)

076 825 7716 (ஆகாஸ்)

உங்கள் முடிப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு
ஒரு வாரத்தில் மாற்றத்தை உணர்வீர்கள்
இயற்கை மூலிகைகளின் சக்தியுடன் தயாரிக்கப்பட்ட
"KALAVATHI HAIR OIL"
"கலாவதி HAIR OIL"



முடி உதிர்வு, பொடுகு, பேன், சொறி, கடி, முடி குறைவு,தலைவலி, முடி நுனி பிளவு போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் முழுமையான பலனை பாவிக்கும் சில நாட்களில் அறிந்து கொள்வீர்கள், அரசாங்க உத்தரவாதம் பெற்ற நம்பிக்கையான முதற்தர Hair Oil (7780)

குடும்பம் முழுவதற்கும் ஏற்ற பாதுகாப்பான தலைமுடி பராமரிப்பு எண்ணெய் குழந்தை முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்றது.

விலை 100ML - Rs 900
விசேட விலைக்கழிவு
200 ML - Rs 1600

076 790 2678
076 852 1876

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
21 வயதில் இருந்து 40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
A/L அல்லது அதற்கு சமமான கல்வி தகுதிகள் எதிர்பார்க்கின்றோம்
சம்பளம் 30,000/- 50,000/-
எமது நேரடி கிளைகள் : கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-5780)
V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
0777 068 777

வாடகைக்கு
யாழ். ஸ்ரான்லி வீதியில் கீல்ஸ் அருகாமையில் நாள், மாத அடிப்படையில் தங்குமிடம் வாடகைக்குண்டு. (7783)
தொடர்புகளுக்கு :
077 651 0375


# மரண அறிவித்தல்

பிறப்பு
06 - 03 - 1945

இறப்பு
02 - 06 - 2026



## சண்முகம் தியாகராசா
(புதுறோட், காரைநகர்)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 84, கல்லூரி வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தியாகராசா (ஒலுமடு நெடுங்கேணி) அவர்கள் கடந்த (02.06.2026) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவபாக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான A.S ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் துஷ்யந்தன் (லண்டன்), சாந்தன் (நீர்கொழும்பு), குகாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகலா, தாமரைச்செல்வி, தயாபரன் (பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ஆகியோரின் மாமனாரும் வர்ஷன், திவிஷன், நர்த்தனா, அக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் Dr.ஜெகதீஸ்வரி, விவேகானந்தராசா, உலகேஸ்வரி, ருக்மணிதேவி, நித்தியானந்தராசா ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற Dr.திருநாதன் மற்றும் பூபதி, விக்னேஸ்வரமூர்த்தி, சிதம்பரநாதன், கிருஷ்ணராணி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பொன்னம்பலம், பரமேஸ்வரி மற்றும் சரஸ்வதி, சரோஜினிதேவி, நாகேஸ்வரி, கமலவேணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2026) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் 84, கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

84, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (C-5777)

தகவல் : குடும்பத்தினர்
077 167 9798

# மரண அறிவித்தல்

பிறப்பு
06 - 05 - 1941

இறப்பு
03 - 06 - 2026



## தர்மராஜன் கனகேஸ்வரி

அளவெட்டி வடக்கு கும்பிளாவளைப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி தாவடி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட தர்மராஜன் கனகேஸ்வரி அவர்கள் நேற்று 03.06.2026 புதன்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - ராசம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தர்மராஜன்(ஓய்வு பெற்ற அஞ்சல் அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும் Dr.ஆனந்தி(பிரதேச வைத்தியசாலை அச்சுவேலி, வைத்தியர்), Dr.வினோதன்(பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்), ஜெயந்தி (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.தில்லையம்பலராஜா, Dr.நிவேதினி(UK), புவிராஜ் (AGM - Amana Life) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் T.கோபிசாந் (பல் மருத்துவ பீட மாணவன் - பேராதனைப் பல்கலைக்கழகம்), P.தோகன்யா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), P.யுகராஜ் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை 05.06.2026 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

41/17, பாடசாலை வீதி,
தாவடி தெற்கு. (7781)

தகவல் : குடும்பத்தினர்
077 3715 798, 077 3276502

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.101, ... வீதி, யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media